# தமிழர் பொருணமியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 95

02.02.2025


# சங்க இலக்கியங்களும் சிறுதானியங்களும்


ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் புதிய வர்த்தக வாய்ப்புகளைத் தூண்டுகின்றது 10

மண் பாங்கு 19

சோளக்கொல்லை பொம்மைகளின் சுவாரஸ்ய வரலாறு! 21

ஆடுகளும் நாய்களும் 15


பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்



# நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் அரிசித்தட்டுப்பாடு

**அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை அறிமுகப்படுத்திய போதிலும், கட்டுப்பாட்டு விலையில் அரிசி இல்லை. கறுப்புச் சந்தை உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டரிசி, பச்சை அரிசி, சிவப்புப் பச்சை அரிசி போன்ற ஏழை மக்களின் அரிசிக்கு தட்டுப்பாடு உள்ளது**

**அகிலன்**

நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் முக்கிய பயிர்களில் ஒன்றாகவும் நெற்பயிர்ச் செய்கையை அழைக்கலாம். நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நெல்வயல்கள் உள்ளன. நாட்டில் குறைந்தபட்சம் 90 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் ஏதோ ஒரு வகையில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளன.

சந்தையில் தற்போதைய அரிசி நெருக்கடியைப் பார்க்கும்போது, பல குறிப்பிடத்தக்க விடயங்கள் உள்ளன.

அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை அறிமுகப்படுத்திய போதிலும், கட்டுப்பாட்டு விலையில் அரிசி இல்லை. கறுப்புச் சந்தை உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டரிசி, பச்சை அரிசி, சிவப்புப் பச்சை அரிசி போன்ற ஏழை மக்களின் அரிசிக்கு தட்டுப்பாடு உள்ளது.

சதொசவில் அரிசி மற்றும் தேங்காய் ஆகியவை கட்டுப்பாட்டு விலையில் கிடைப்பதாகக் கூறப்பட்டாலும், சதொசவில் அரிசி, தேங்காய், முட்டை, தேங்காய் எண்ணெய் போன்றவை போதுமானளவு இல்லை.

அரசாங்கத்திற்கும் பிரதான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு அது தொடர்ந்து அதிகரித்து வருவதையும் காணமுடிகிறது.

சந்தை நிலைமை குழப்பமாகவும் சிக்கலானதாகவும் உள்ளது. சிலநேரங்களில் தடையற்ற சந்தை நிலைவரத்திற்குத் தேவையான அரிசி சந்தையில் இருக்காது. ஒரு சில ஆலை உரிமையாளர்கள் அரிசி இருப்பை மறைக்க முயல்வதையும், தட்டுப்பாடு ஏற்படுத்துவதையும், விலையை நிர்ணயம் செய்ய முயல்வதையும் பார்க்க முடிகிறது. ஜனாதிபதியின் தலைமையீட்டின் பேரில் இதுவரை இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. அங்கு மொத்தமாக அரிசியை சந்தைக்கு விடுவித்து உத்தரவாத விலையில் வழங்குவதாக உறுதியளித்தும், ஆலை உரிமையாளர்கள் கலந்துரையாடலுக்குப் பின்னர் தமது கடமைகளை நிறைவேற்றுவதில்லை.

அரிசி தொடர்பாக நிலவும் சந்தை நிலைமைகளின் கீழ் பின்வரும் எதிர்மறையான காரணிகளைக் காணலாம்.

நெற்செய்கையாளர்களின் வருமானம் அதிகரிக்கவில்லை, செலவுகள் அதிகரித்துள்ளன. நுகர்வோருக்கு நிவாரணம் இல்லை. விலை அதிகம். பொருட்களின் பற்றாக்குறை. அரிசி இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் அதற்கு அதிக காலம் எடுக்கும்.

நமது அறிவு மற்றும் அனுபவத்தின்படி, நாட்டில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக அரிசிப் பிரச்சினை உள்ளது. அரிசி நெருக்கடி காரணமாக அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இருப்பினும், நெருக்கடிக்கு நிலையான தீர்வு இல்லை.

சமீபத்திய சூழ்நிலையின்படி, அரிசி நெருக்கடியில் பல போக்குகள் காணப்படுகின்றன.

எந்த சூழ்நிலையிலும் அரிசி கிடைக்க வேண்டும் என்பது வாடிக்கையாளரின் கோரிக்கை ஆகும். அரிசி விலை உயர்ந்தாலும் விவசாயிக்கு எந்தப் பலனும் கிடைப்பதில்லை.

அதேவேளை பயிர் சேதத்தைக் குறைப்பதற்கான முறையான திட்டம் இல்லை. இழப்பீடு வழங்குவதில் விவசாயி திருப்தி அடையவில்லை.

நெல், தென்னை, தேயிலை, இறப்பர் மட்டுமின்றி, பல பயிர்களுக்கு ஆராய்ச்சி நிலையங்கள் இருந்தும் புதிதாக எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நிறுவனங்கள் புதிய வழியில் செயற்பட வேண்டும், அல்லது மூடப்பட வேண்டும். சதொசவினால் மட்டும் வர்த்தகம் செய்ய முடியாது. சுதந்திர சந்தைக்கு ஏற்றவாறு புதிய உத்திகளைப் பயன்படுத்த வேண்டும். தொடக்கத்தில் அரசத்துறை, தனியார் துறை மற்றும் கூட்டுறவுத்துறை சார்ந்த பொருளாதாரம் குறித்து ஜனாதிபதி பேசினார். அந்த முறை மிகவும் நடைமுறைக்குரியது என்று நாம் கருதுகிறோம்.

சமீபத்திய அரிசி நிலைவரம் சற்று சிக்கலானது என்றே கூற வேண்டும். ஜனாதிபதியுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஆலை உரிமையாளர்கள், உத்தரவாத விலையில் சந்தைக்கு அரிசியை விடுவிப்பதாக உறுதியளித்திருந்த போதிலும், அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை.



புறக்கோட்டையில் உள்ள மொத்த வியாபாரிகள் கூறுகையில், சந்தைக்கு அரிசி வரவில்லை. இப்போது மலிவான அரிசி இல்லை. விலை உயர்ந்த அரிசியும் இல்லை. பிரச்சினை மேலும் பரவும் எனத் தெரிகிறது. அரசு அதிகாரிகள் அரிசி ஆலை பரிசோதனைக்கு சென்றிருந்தாலும், ஒரு கோப்பை தேநீர் அருந்திவிட்டு திரும்ப வேண்டியதாயிற்று. அரிசியின் நிலையும் மிகவும் மோசமாக உள்ளது. சதொசவுக்கு வரும் வாடிக்கையாளர்கள் அரசை, ஆலைஉரிமையாளர்களை, வியாபாரிகளை திட்டிவிட்டு வெறுங்கையுடன் வீடுகளுக்கு செல்லும் நிலை காணப்படுகிறது என்கின்றனர்.

சந்தை நிலவரத்தை கட்டுப்படுத்த அரசத்துறை, தனியார் துறை, கூட்டுறவுத்துறை, தோட்டத்துறை, நடமாடும் துறை ஆகியவை நியாயமாகவும் இணக்கமாகவும் செயல்பட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி சந்தைக்கு விடப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே விலையில் ஒரு கிலோ நாட்டு அரிசியை சுமார் நூற்று ஐம்பது ரூபாவிற்கு வழங்க முடியும் என அரிசி இறக்குமதியாளர்கள் முன்னர் தெரிவித்திருந்தனர். ஆனால் தற்போதைய நிலைவரப்படி ஒரு கிலோ அரிசி இருநூற்று இருபது ரூபாய்க்கு குறைவாக இருக்க முடியாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரிசி மாஃபியாவை எதிர்கொள்ள ஆரம்பத்திலிருந்தே தயாராகி புதிய உத்திகளைத் தேட வேண்டும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அரிசி கையிருப்பை அரசு பராமரிக்க வேண்டும். விவசாய சேவை மற்றும் விவசாயிகள் சங்கங்கள் தலையிட வேண்டும். சந்தை ஒழுங்குமுறை பராமரிக்கப்பட வேண்டும்.

**குடும்ப நிருவாகத்தில், அரசு நிருவாகத்தில், வேலை செய்வதில், வேளாண்மையில், பேசுவதில், தலைமை தாங்குவதில், நடைமுறை வாழ்க்கையில், உண்பதில், உறங்குவதில், சுற்றுவதில், அனுபவிப்பதில் என பலவற்றிலும் நிலைமையைச் சமாளிப்பது என்பது, சூழ்நிலையை நிர்வகிப்பதில் அடங்குகிறது.**

# வாழ்ந்து காட்டுவோம் வாருங்கள்!

பூரணி

பல விளம்பரங்களைப் பார்க்கலாம், அதில், வீட்டிற்கு திடீரென விருந்தாளிகள் நிறையபேர் வருவதாகவும், அவர்களுக்கு தேநீர், உணவு ஏற்பாடுகளை உடனடியாக எப்படி தயாரித்துக் கொடுத்து நன்மதிப்பைப் பெறுவது என்பதற்காக, உடனடி சமையல் தீர்வுகளை வெளியிட்டு, அதற்கு, அவர்களது பொருட்களை வாங்குங்கள்; நிலைமையைச் சமாளியுங்கள் என்பதாகவும் இருக்கும்.

மொத்தத்தில் அந்த விளம்பர யுக்தி போலவே, விளம்பரப் பொருட்கள் போலவே, நம் அன்றாட வாழ்க்கையில் எதற்கும் தயார் நிலையில் இருக்க வேண்டியுள்ளது.

நம்மில் பெரும்பாலானோர் தினசரி, வார, மாதம் என வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பவர்களாகவே உள்ளோம். நமது வருவாய் என்ன என்பதை நாம் அறிவோம். சம்பாதித்து வரும் பணத்தை செலவழிக்கும் பொறுப்பில் உள்ளோரையே நாம் குடும்பத் தலைவராக எடுத்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட வருவாய் கைக்கு வருவதற்கு முன்பே அதனை எதெதற்கு செலவு செய்வது என ஒரு பட்டியல் மனதுக்குள் ஓடிக்கொண்டிருக்கும்.

உலகம் முழுமைக்குமே வருவாய்க்கு மேல்தான் செலவுகள் உள்ளன. அப்படி செலவு செய்யும் போது, யாரும், எதிர்பாராத செலவினம் எனும் ஒன்றிற்கு எந்தத் தொகையும் ஒதுக்குவது இல்லை. எதிர்பாராத செலவினம் என்று ஒன்று வந்தால், அவசரத்திற்கு, கடன் வாங்கித்தான் நிலைமையை சமாளிக்க வேண்டியுள்ளது. அப்படி அடிக்கடி குடும்பத்தில் எதிர்பாராத செலவினங்களுக்கு என்று அடிக்கடி கடன் வாங்கும் போது கடனாளியாகி வாழ்க்கையில் காகிதக் கப்பல் போல் செயலிழந்து விடுகிறோம். அதன் விளைவே திடீர் மரணங்கள். குடும்பத்தில் பொருளாதார நிலைமையை சமாளிக்க இயலாதோர் நிலை இவ்வாறு உள்ளது.

அது மட்டுமே நிலைமையைச் சமாளிப்பது எனும் பட்டியலில் வருவதில்லை. குடும்ப நிருவாகத்தில், அரசு நிருவாகத்தில், வேலை செய்வதில், வேளாண்மையில், பேசுவதில், தலைமை தாங்குவதில், நடைமுறை வாழ்க்கையில், உண்பதில், உறங்குவதில், சுற்றுவதில், அனுபவிப்பதில் என பலவற்றிலும் நிலைமையைச் சமாளிப்பது என்பது, சூழ்நிலையை நிர்வகிப்பதில் அடங்குகிறது.

எல்லா உயிரினங்களுமே நிலைமையைச் சமாளிக்கும் திறனை இயற்கையாக கொண்டுள்ளன. ஒற்றைத் திறனையே அவை சுற்றிச்சுற்றி வருவதில்லை. ஒன்றில்லையெனில் மற்றொன்று என வகைபடுத்தலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒன்றில்லையெனில் மற்றொன்று என்பதில் மன நிறைவு மாறுபட்டிருக்கலாம். ஆனால், சூழ்நிலையைச் சமாளிப்பது எனும் பொருளில் அவைகள் அடங்கி விடுகின்றன.

நிலைமையைச் சமாளிப்பது என்பது ஒரு கலை. அந்தக் கலையை கையாளும் திறனை நாம் ஒவ்வொருவரும் பெற்றிருந்தால், வாழ்க்கை நிம்மதியாகத் தடையின்றி நகரும். அந்தக் கலை கை கூடாதோர் நிலைமையைச் சமாளிக்கும் திறன் பெற்றோரைக் கூர்ந்து கவனித்து வளர்த்துக் கொள்ளலாம். நிலைமையை சமாளிக்க கற்றுக் கொள்வோம்.



தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

04

ஞாயிற்றுக்கிழமை

02.02.2025

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

# தனியார் வாகன இறக்குமதி

**2025 ஆம் ஆண்டின் நற்செய்தியாக இலங்கையில் தனியார் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கி இருக்கிறது.2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நடைமுறையில் இருந்த தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, தனிப்பட்ட பயன் பாட்டிற்காக 304 ஒருங்கிணைந்த வகைப்பாடு குறியீடுகளின் கீழ் வகைப்ப டுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்ய இன்று (01) முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.**

**அதன்படி, பொது போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் கார்கள், , பேருந்துகள், பொருட்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள், சிறப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும்வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் இயந்திரங்களைப் பயன்படுத்தாத பிற பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அந்நியச் செலாவணி இருப்புகளைப் பாதுகாத்தல், அந்நியச் செலாவணியை இழந்து அதிக அளவில் வாகனங்களை இறக்குமதி செய்வதை ஊக்கப்படுத்தாமல் இருத்தல், அரச வருவாயை அதிகரித்தல் போன்ற நோக்கங்களுடன், நாட்டில் இயல்பானபொருளாதாரநடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகம சில நிபந்தனைகளையும் விதித்திருக்கிறது .**

# பூமியின்கடைசி நாடு



இந்த நாட்டில் பகல் , இரவு எப்படி இருந்தாலும் வாழ்க்கை தரம்,பொருளாதாரம் தங்குதடையின்றி நடந்துக்கொண்டிருக்கிறது. பொதுவாக விடியல் வந்தால் நிச்சயம் இரவு வரும். மீண்டும் விடியும்என்பதுதான் தெரியும். ஆனால் இங்கு 6 மாதம் விடியல் மட்டுமே இருக்கும்.அடுத்த 6 மாதம் இரவு மட்டுமே இருக்கும். இந்த நாடுதான் பூமியின் கடைசி நாடாகவும்உள்ளது.இப்படி 6 மாதம் பகலாகவும் 6 மாதம் இரவாகவும் இருக்கும் நாடானநார்வேயில் ஆர்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஸ்வால்பார்ட் என்ற தீவு பற்றி தான்நாம் இங்கு பார்க்க போகின்றோம். இங்கு பகல், இரவு 6 மாதங்கள் நீடிக்க அதன் அமைவிடம்தான் காரணமாகஉள்ளது. அதாவது இது பூமியின் கடைசி நாடாக இருப்பதால், அது தனது அச்சில் சுழலும் வடதுருவத்திற்கு அருகில் இந்த நாடு அமைந்துள்ளது. எனவேதான் இதன் இரவு 6 மாதமும்,பகல் 6 மாதமும் நீடிக்கிறது.6 மாத இரவின் போது சூரியன் அடிவானத்திற்கு கீழ் மறைந்திருக்குமாம்.அதற்கு போலார் நைட் என்று அழைக்கின்றனர். அந்த இரவை காண கண்கோடி வேண்டும் என்றுஅனுபவித்தவர்கள் சொல்வார்கள்.இதற்காகவே இந்த இரவை அனுபவிக்க பலர் இங்குசெல்கின்றனர்.

இந்த இரவானது அக்டோபர் பிற்பகுதியிலிருந்து பிப்ரவரி நடுப்பகுதி வரைநீடிக்கிறது.ஏன் அது வசீகரிக்கும் இரவு என்று சொல்லப்படுகிறது தெரியுமா..?ஏனெனில் சூரியன் வானின் அடிப்பகுதியில் ஒளிந்திருப்பதால் ஸ்வால்பார்ட் பகுதிமுழுவதும் சூரியனின் வெளிச்சம் பட்டும் படாமலும் தெரியும். இதனால் வானம் நீலம்மற்றும் ஊதா நிறத்தில் காட்சியளிக்கும். அதன் பிரதிபளிப்பு பளிங்கு கற்களைபோல் ஒளிரும் பனிக்கட்டிகள் மீதுகாண்பதற்கே கண்கொள்ளா காட்சியாக அமைகிறது. இதன் அழகை காணவே சுற்றுலா பயணிகள்பலர்இங்குகுவிகின்றனர்.இங்கு மற்றுமொருஅரியநிகழ்வுஎன்னவெனில் நடு இரவில் சூரியனைபார்க்கலாம். அதாவதுஏப்ரல்நடுப்பகுதிமுதல்ஆகஸ்ட் நடுப்பகுதி வரை ஸ்வால்பார்ட்தீவில் கப்பலில் பயணம் செய்தால் நள்ளிரவில் சூரியன் தெரியும். சூரியனுக்கு கீழ்நீங்கள் பயணம் செய்வீர்கள். அதிலிருந்து வீசும் ஒளி பல வண்ணங்களை நம் மீது தூவிச்செல்லும். அந்த வண்ணங்கள் அந்த பகுதியை ரம்மியமான அழகால் கொள்ளைகொள்ளும்.இந்தநாட்டில்பகல் , இரவு எப்படி இருந்தாலும் வாழ்க்கை தரம்,பொருளாதாரம் தங்குதடையின்றி நடந்துக்கொண்டிருக்கிறது.



தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 215,750.00 ரூபா.**

**24 கரட் தங்கம் 235,300.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** கிளிசரியா இயற்கை உரம் பற்றி விளக்க முடியுமா?

**பதில்-** டி.ஏ.பி உரத்தினை மண்ணிற்கு அடியுரமாக விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றார்கள்.

இயற்கை எமக்கு கொடுத்த கிளிசர்யா இருக்கும் வரை டி.ஏ.பி உரத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. என்பதை விவசாயிகள் அறிந்திருக்க வேண்டும்.

காரணம் இந்த கிளிசர்யா மிக வேகமாக மட்கி மண்ணில் கரைந்து மண்ணை வளப்படுத்தும் இயல்புடையது.

டி.ஏ.பி உரத்தை விட கிளிசரியா இலைகள் பன்மடங்கு பயனைத்தரக்கூடிய இயற்கை உரமாகும்.

இப்படிப்பட்ட ஒரு தாவரத்தின் அருமையை நாம் ஏன் மறந்தோம்.?

இது ஒரு அருமையான உரச்செடி. என்பதை விவசாயிகள் நினைவில் வைக்க வேண்டும்.

விவசாயிகள் எந்தப் பயிர் செய்தாலும். பயிரை சுற்றி கிளிசர்யா இலைகளை பயிரின் அடிப்பகுதியில் போட்டு மண் அணைக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மண்ணின் வளமும் பன்மடங்கு பெருகும்.



இவ்வாறான சூழலில் இயற்கை உரமே எமக்கு கைகொடுக்கும் இப்போது மட்டுமல்ல எப்போதுமே என்பதனை நாங்கள் உணர வேண்டும்.

அதோடு டி.ஏ.பி உரத்துக்கு பதிலாக கிளிசரியா இலைகளை பயன்படுத்தலாம்

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807
+94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 80/= |
| பச்சை மிளகாய் | 1150/= |
| தக்காளி | 300/= |
| மரவள்ளிக்கிழங்கு | 250/= |
| கோவா | 200/= |
| கரட் | 400/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 450/= |
| பாகற்காய் | 485/= |
| வெண்டிக்காய் | 230/= |
| பயற்றங்காய் | 240/= |
| பீற்றூட் | 580/= |
| முருங்கைக்காய் | 900/= |
| தேங்காய் | 165/= |




**வாங்கும் விலை**


| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 182/= |
| கனடா டொலர் - | 201/= |
| சீன யுவான் - | 37/= |
| யுரோ - | 305/= |
| ஜப்பான் யென் - | 1.8/= |
| சிங்கப்பூர்டொலர் - | 216/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 347/= |
| சுவிஸ் பிராங் - | 321/= |
| அமெரிக்க டொலர் - | 294/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 210/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 318/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர் டொலர் | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 368= |
| சுவிஸ் பிராங் - | 336/= |
| அமெரிக்க டொலர் - | 302/= |

# ‘சுத்தமான காற்றே, மூளையின் ஆரோக்கியம்’

நம்மால் உணவு, நீர் ஆகியவை இல்லாமல் ஒரு வாரம் வரை உயிர் வாழ முடியும். ஆனால், காற்று இல்லாமல் ஐந்து நிமிடம்கூட இருக்க முடியாது. நாம் ஒரு நாளைக்கு 22 ஆயிரம் முறை சுவாசிக்கிறோம், 16 ஆயிரம் முறை காற்றை உள்ளிழுத்து வெளிவிடுகிறோம். நாம் சுவாசிக்கும் இந்தக் காற்றில் 78 சதவீதம் நைட்ரஜனும் 21 சதவீதம் ஆக்ஸிஜனும் மீதமுள்ள 1 சதவீதம் கார்பன் மோனாக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்ஃபர் ஆக்சைடு, ஓசோன், மீத்தேன் என்று இன்னும் பல வாயுக்களும் கலந்துள்ளன. வளர்ந்துவரும் நாகரிகத்தாலும், வாகனங்களின் அதிகரிப்பாலும், தொழிற்சாலைகளின் தொடர் இயக்கத்தாலும், காற்று மாசுபடுவதும் அதிகரித்துவருகிறது.




நச்சுத்தன்மையுள்ள வாயுக்கள் நாம் வாழும் இந்தப் பூமியின் காற்றை மாசுபடுத்திய வண்ணமே உள்ளன. காற்றுதானே மாசுபடுகிறது அதனால் நமக்கென்ன கவலை என்று நாம் யாரும் ஒதுங்கிவிட முடியாது. நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள ஆக்ஸிஜனின் அளவு குறையக் குறைய, நச்சுத்தன்மையுள்ள நுண்வாயுக்களின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, மனிதர்கள் பல்வேறு நோய்களால் இறக்க நேரிடும்.

## மூளையைப் பாதிக்கும் காற்று

காற்று மாசுபடுவதால் ஒரு வருடத்துக்கு 90 லட்சம் முதல் 120 லட்சம் வரையானோர் இறக்கிறார்கள். பக்கவாத நோய் 25 சதவீதமும் மாரடைப்பு நோய் 25 சதவீதமும் நுரையீரல் நோய் 43 சதவீதமும் புற்றுநோய் போன்ற நோய்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன. காற்று மாசுபடுவதால் நுரையீரல் நோய் வரும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், காற்றும் கபாலத்தினுள் இருக்கும் மூளையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையது. காற்று மாசுபட்டால் நமது மூளையிலும் பாதிப்பு ஏற்படும் என்கின்றன புதிய ஆய்வுகள். எப்படி?

நமது மூக்கில் உள்ள ஆல்ஃபாக்டரி எபிதீலியம் எனும் உறுப்பு, நாம் வாசனையை உணர்வதற்கு உதவுகிறது. இதுவே நம் மூளையையும் காற்றையும் தொடர்புபடுத்துகிறது.

நமது மூக்கின் வழியாக உள்ளிழுக்கும் காற்றில் மாசு கலந்திருக்கும்போது, மாசின் அளவைப் பொறுத்து பாதிப்பு ஏற்படுகிறது. மாசுத்துகளின் அளவு அதிகமாக இருந்தால், நமது மூக்கில் இருக்கும் முடியானது துகள் உள்ளே செல்லாமல் தடுக்கிறது. இந்தத் துகளானது கொஞ்சம் சிறியதாக இருந்தால் நமது தொண்டைப் பகுதிவரை செல்கிறது. ஆனால், இந்தத் துகள் நுரையீரலைச் சென்றடையாமல், நாம் இதை இருமல் மற்றும் தும்மல் வழியாக வெளித்தள்ளுகிறோம். இந்தத் துகள், மிகவும் நுண்ணிய அளவில் இருந்தால் ஆல்ஃபாக்டரி எபிதீலியம் வழியாகச் சென்று மூளையில் படிந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## குழந்தைகளுக்கும் பாதிப்பு

அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதால் நச்சுத்தன்மையுள்ள துகள்கள் மூக்கில் ஆல்ஃபாக்டரி எபிதீலியம் வழியாக மூளையைச் சென்றடைந்து ‘பிளட் பிரெய்ன் பேர்ரியர்’ (Blood Brain Barrier) எனும் மூளையின் பாதுகாப்பு வளையத்தைச் சிதைத்து விடுகிறது. அதனால் சாதாரணமாக மூளைக்குள் நுழைய முடியாத பல கிருமிகள், வேதியியல் பொருட்கள் போன்றவை மூளையைத் தாக்கி ‘இம்யூன் டிஸ்ரெகுலேஷன்’ (Immune Dysregulation) என்ற பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் ‘மல்டிபிள் ஸ்கெலரோசிஸ்’ (ஙிற்யிமிஷ்ஞ்ரீயிள றீஉயிளஷலிவிஷ்வி) எனப்படும் கொடிய வியாதி மூளையைத் தாக்கிப் பல உயிர்கள் இறக்கின்றன. மூளையில் ஞாபகத் திறன் குறைந்து மூளை தன்னிலை இழந்து நிற்கும். எனவே, காற்றைச் சுத்தமாக வைக்க முயல்வோம்!

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY

# உன்னால் முடியும்

ஆரா

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார். அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு ' ஏன் சோகமாக இருக்கிறீர்கள் ' என்று கேட்டார். அதற்கு இவர் 'எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன் ' என்றார்.

'எவ்வளவு ரூபாய் நஷ்டம் ?' .

' 50 கோடி ரூபாய் ' என்றார் இவர்.' அப்படியா, நான் யார் தெரியுமா ? ' என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார். அசந்து போனார் இவர்...

'சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா ? ' என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர் ' ஆமாம் எல்லாம் சரியாகி விடும் ' என்றார். பின் அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி 'இந்தா இது 500 கோடிக்கு செக், நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன்.



எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன் ' என்று சொல்லி விட்டு செக்கை இவர் கைகளில் திணித்து விட்டு சென்றார் அவர். பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர். இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். 'நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது ? எதனால் ஏதற்காக ஏற்பட்டது ? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்' என்று கேட்டுக் கொண்டார். பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு களையப்பட்டன.

மிக சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு மூச்சு செயல் சிந்தனை தூக்கம் அனைத்து அவருடைய தொழிலை பற்றியே இருந்தது. மிக சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன.

மிகச்சரியாக 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம்.

அடுத்த நாள் விடியற்காலை அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது.

சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரை காணவில்லை. இவர் சென்று அந்த பெண்மணியிடம் ' எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர் ? ' என்றார். அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் ' உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா? ' என்றார்.

' இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள் ?' என்றார்.

அந்த பெண்மணி.

' இல்லை அய்யா அவர் ஒரு பைத்தியம் அதாவது மனநிலை சரி இல்லாதவர், செக் தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையேழுத்திட்டு கொடுத்து விடுவார் ' என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேசமுடியவில்லை.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் 'எந்த ஒரு விஷயமும் நம்மால் முடியும்

என்று முதலில் நாம் நம்பவேண்டும் '.. அப்போது தான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

# எங்கட வாழ்வியல்

**இன்றைய பெருமழை அகாலத்தில் பெய்கிறது. பருவ விதிகளின் படி இப்போது அறுவடை தொடங்கிவிட்டது ஆனால் எப்படி அறுவடை செய்ய முடியும். அத்துடன் இன்றைய யந்திர மூலமான அறுவடைக்கு நெல் தலை சாய்ந்து விட்டால் மிக மோசமான சேதாரம் விளையும். விளைவில் பாதி தரையோடு கொட்டி நாசமாகிவிடும்.**

## பார்வை



தமிழ்க்கவி

பருவத்தே பயிர் செய்'என்ற பழமொழி பல வகைகளில் உதாரணமாக சிறுவயதில் கல்வி கற்க வேண்டும் மணமாக வேண்டிய பருவத்தில் மணமாக வேண்டும் குழந்தைப்பேறும் அவ்வாறே நடந்தாக வேண்டும். என்பதற்கும் இதைத்தான் கூறுவார்கள். ஆனால் பயிர் என்பதும் பருவத்தில்தான் செய்ய வேண்டும.; அதாவது காலமாற்றம் பயிர்களுக்கு ஏற்றாற் போல அமையும். மாரி தொடங்கும் போது நெல் விதைத்தால் அது முடியும்போது அறுவடை நடக்கும். காரணம் நெல்லின் வளர்ச்சிக்கேற்ப நீர் தேவையான போது மழையும,;அறுவடைக்கேற்பமழையில்லாத சூழல் அறுவடைக்காலத்திலும் நடக்கும்.

இப்போதுகாலமாற்றம்என்பதுநிலையாக இல்லை. புரட்டாசி பதினைந்திலிருந்து தை பதினைந்து வரை மாரிகாலம், தை பதினைந்திலிருந்து வைகாசி பதினைந்து வரை புழுக்ககாலம், வைகாசி பதினைந்திலிருந்து புரட்டாசி வரை காற்றுக்காலம். இப'படி மாறுகின்ற ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொருசிறப்பு கிராம மக்களால் கூறப்பட்டு அவை பழமொழிகளாக இருந்தன.

ஆம் இருந்தன. ஆனால் இன்று பலவற்றுக்கு அதன் அர்த்தம் மறைந்து விட்டது 'தையும் பிறக்க தையடா பொக்கணத்தை''தையும் மாசியும் வையகத்துறங்கு"மாசிப்பனி மூசிப்பெய்யும்'தைமாதம்அறுவடைக்காலம் விவசாயிகளை நாடி உதவி கேட்டு வருபவர்களுக்கு களங்களில் வைத்தே தான தருமம் செய்யும் விவசாயிகள் பெருகியுள்ள நாடு இது. எனவே, தானம் பெறுவோர்கோவில்கள்அறச்சாலைகளுக்கு நன்கொடை வசூலிப்போர் அனைவரும் துணியால் அமைக்கப்படும் பொக்கணம் எனப்படும் முடிச்சு ஒன்றை செய்து கொள்வார்கள்

. தையும் மாசியும் பனிக்காலம் கடுமையான குளிர் வாட்டும். அன்றைய வீடுகளை வைக்கோலால் வேய்ந்திருப்பர். பனியின்துளிவிழவிழவைக்கோல்ஈரமாகும். வைக்கோலில் ஈரம் படப்பட கதகதப்பான சூடு கிளப்பும.; படுக்கை இதமாக இருக்கும். அதனால்தான் வை அகம் வைக்கோல் போட்ட வீட்டில் படுஎன்றார்கள்.

'பங்குனிமாதம் பகல்வழி போறவரைப் பார்த்திருந்தாலும் பாவம்'அந்தக்காலத்தில் கால்நடைப்பயணம்தான் எல்லோருமே. பங்குனி மாத வெய்யில் கடும் வெப்பமாக இருக்கும் அதை பார்க்கும் போதே கண்கள் கனலும.; அந்த வெய்யிலில் நடந்து போவது எவ்வளவு கொடுமை. அதனால் வந்த பழமொழி அது. இப்படியே ஒவ்வொரு மாதங்களுக்கும் அததன் இயல்புக்கேற்ப பழமொழிகள் உண்டு. என்றாலும் இயற்கையை மனிதர்கள் மாற்றிப் போட்டு நடத்திய விளையாடல் பருவகாலங்களை தலைகீழாக மாற்றி விட்டது.

இன்றைய பெருமழை அகாலத்தில் பெய்கிறது பருவ விதிகளின் படி இப்போது அறுவடை தொடங்கிவிட்டது ஆனால் எப்படி அறுவடை செய்ய முடியும். அத்துடன் இன்றைய யந்திர மூலமான அறுவடைக்கு நெல்தலைசாய்ந்துவிட்டால்மிகமோசமான சேதாரம் விளையும். விளைவில் பாதி தரையோடு கொட்டி நாசமாகிவிடும்.

சிறு தானியப்பயிர்களான உழுந்து பயறு கௌபீ என்பன அநியாயமாகிவிடும் பயறு வெய்யில் கண்டால் வெடித்துப் பறந்துவிடும். எனவே அதை பழுக்க பழுக்க ஆய வேண்டும். உழுOந்து பழுத்தபின் முழுச்செடியும் காய்ந்தபின் வெட்டலாம். அது தட்டாதவரை கொட்டாது. ஆனால் இப்படிமழைபெய்தால்அது இரண்டுமூன்று நாட்கள்நனைந்தால்பல்லை இழித்துவிடும்.

இன்றைய விவசாயிகளின் கையறு நிலை இதுதான். சொந்தமாக நிலமற்றவர்கள், பெரும்பாலும் நிலத்தை வைத்திருக்கும் பெரும் தனக்காரர்களிடம் குத்தகைக்கு நிலத்தை வாங்கி, சிறுதானியமோ, நெல்லோ விதைப்பதுண்டு. இவர்களால் எப்படி குத்தகையை செலுத்த முடியும். எனவே, அடுத்த போகத்தில் இவர்களுக்கு நிலம் கிடைப்பது சந்தேகம்தான். .

தைமாதத்தில் தோட்டச்செய்கையை ஆரம்பிக்கும் காலம். மார்கழி கடைக்கூறிலிருந்து சிலர் ஆரம்பிப்பார்கள. மிளகாய்ச் செய்கையாளர்கள் குழிக்கன்றுகளை நாட்டி காலையிலேயே நீரூற்றி அவற்றை உய்யச்செய்கிற காலம் இது ஆனால் மழை பெருமளவிலான பகுதிகளில் தரை உழவே செய்ய முடியாத அளவுக்கு பாதித்துள்ளது. உழவு செய்யாமல் மழையைத்தாங்கும் தோட்டநிலத்தை களைகளும் புற்களும் ஆக்கிரமித்து மண்டிவிட்டன போட்ட நாற்று மேடை அழுகத் தொடங்கி விட்டது என சிறு தோட்டச் செய்கையாளர் ஒருவர் வருந்தினார்.

இந்த வெள்ள அனர்த்ததிற்கான அழிவுகளை மதிப்பீடு செய்தாலும் விவசாயிகளுக்கு அதற்கான இழப்பீடு கிடைப்பது குதிரைக் கொம்புதான். காரணம் அதிகாரிகளின் அசமந்தப்போக்கு சில இடங்களில் பயன்தரு மரங்கள் வேருடன் பாறிவிட்டன. ஏற்கெனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகளில் மோசடிகளை சுட்டிக்காட்டியிருந்தேன். அதைவிட நாங்கள் போருக்குள் வாழ்ந்த காலத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கவிருக்கும் நட்ட ஈட்டையோ, இழப்பீடுகளையோ,

மானியங்களையோ மக்கள் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினார்கள். ஒருவிவசாயிக்கு உழவுக்கான கடன்தொகை அந்த நிலத்தின் அறுவடை நடக்கும் போதுதான் கிடைத்தது. அதில் பாதி மானியம் என்பதால் அதையும் மக்கள் எடுத்தார்கள். அப்போது ஒரு ஏழைவிவசாயி தனது கடனைப் பெற, நெல்லை விதைக்குமுன் போய்க்கேட்டார்.

அதற்கு பதிவை செய்துகொண்டிருந்தவர் சொன்னார் 'இதை நான் பதிய முடியாது கதிர் வந்தால்தான் தரலாம்'என்று அந்த விவசாயி தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரும்ப, 'ஐயா கொஞ்சம் உதில இருங்கோ,.. கதிர் இப்ப வந்திருவார் தருவார்'என்றாராம். அந்த பொறுப்பாளரின் பெயர் கதிர் என்பதை அவர் அப்போதுதான் அறிந்தார். ஆனாலும் என்ன கதிர் வந்து அவரது விபரங்களைப் பதிவு செய்துவிட்டு 'காசு வர நாங்கள் அறிவிப்பம் அப்ப வாங்கோ'என்றான் அந்தக்காசும் அரிவி வெட்டுக்குத்தான் வந்தது.

பெரும்பாலும் லட்சக்கணக்கில் செலவிட்டு இரண்டேக்கர் நிலத்தை விதைப்பவர் அதை வீட்டுக்கு கொண்டுவருவதன் முன் எத்தனை பேரிடம் கடனுக்காக அலைகிறார். முற்காலம் போல பத்து கிராமவாசிகளைத் தேடி அவர்களைக்கொண்டு செய்த வேலைகளை ஒரேயொரு முதலாளி தனது யந்திரத்தின் மூலம் செய்து பத்துக்கூலிகளையும் அவர் ஒருவரே பெற்றுக் கொள்கிறார். வேலை விரைவாக முடிகிறது. ஆனால் சேதம் அதிகமாக தெரிகிறது. ஏராளமான தற்கால இளைஞர்கள் தொழில் அறிவு என்பதை சமூகவலைத்தளங்களிலிருந்துதான் கற்றுக் கொள்கிறார்கள். அதனால், முழுமையான சமுதாயம் கரைந்துபோவதை கண்முன்னால் காண்கிறோம். விவசாயத்தில் புரட்சி செய்த பல நாடுகளை நாம் உதாரணமாக எடுத்தாலும் இயற்கையை அழிவிலிருந்து காப்பாற்றாதவரை மேலும் அபிவிருத்தி எப்படி சாத்தியம,; ' இருக்கிறத விட்டிட்டு பறக்கிறதைப் பிடிக்கிற மாதிரித்தான் .

# சங்க இலக்கியங்களும் சிறுதானியங்களும்

சிறுதானியங்களான கம்பு, சோளம், வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கேழ்வரகு போன்றவையே சிறுதானிய உணவுகள் ஆகும். இதனை சாப்பிடுவதால் சர்க்கரை நோய், உடல் பருமன், ரத்த கொதிப்பு போன்ற நோய்களில் இருந்து நம்மை காத்துக் கொள்ளலாம்.

இவை அதிக ஆற்றலை தரக்கூடியவை. அரிசி, கோதுமை போன்ற மற்ற தானியங்களுடன் ஒப்பிடும்போது இவை புரதச்சத்து, நார்ச்சத்து மிகுந்தும், பைடிக் அமிலம் குறைந்தும், இரும்பு, கால்சியம் மற்றும் வைட்டமின்களை கொண்டது.

**தினை:** தினையில் அதிகளவு இனிப்பு பலகாரம் செய்யலாம். அதாவது சர்க்கரைப்பொங்கல், கருப்பட்டி, உளுந்தங்களி, பாயாசம், அதிரசம், மைசூர்பாக் மற்றும் லட்டு ஆகியவற்றை செய்யலாம். இருப்பினும் தினையை உட்கொள்ளும்போது உடல் சூடு அதிகரிக்கும்

கண்ணுக்கு ஒளியை அதிகரிக்கும் பீட்டா கரோட்டின் அதிகம் உள்ளது. தினைமாவுடன் தேனை கலந்து சாப்பிடும் போது கபம் நீங்கும். விரைவில் செரிமானமாகும்.

**சாமை:** எல்லாவித சமையலுக்கும் உகந்த சிறுதானியமாக சாமை விளங்குகிறது. சாதம், இட்லி, தோசை மற்றும் கிச்சடி போன்ற உணவுகளை இவற்றில் செய்யலாம். நெல்லரிசியை காட்டிலும் 7 மடங்கு நார்சத்து கொண்டதால் மலச்சிக்கல் மற்றும் நீரிழிவு பிரச்சனைக்கு தீர்வாக அமைகிறது.

இரத்த சோகை உள்ளவர்களுக்கு சாமை சிறந்த தீர்வை தருகிறது. இதில் அதிகளவு மினரல்ஸ் உள்ளதினால் நம் உடலில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கையை மிகவும் எளிதாக அதிகரிக்கிறது.

**குதிரைவாலி:** குதிரைவாலி சுவைமிகுந்தது. இவற்றில் இட்லி, இடியாப்பம் கொழுக்கட்டை போன்ற ஆவியில் வேகவைக்கும் உணவுகள் மிகவும் மிருதுவாக இருக்கும். அல்சர் மற்றும் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும்.

காய்ச்சல் நேரத்தில் கஞ்சி வைத்து குடித்தால் காய்ச்சலை குணப்படுத்தும். மேலும் வாய்வு பிரச்சனைகளை குணப்படுத்தும். குதிரைவாலி, உளுந்து சேர்த்து களியோ அல்லது கஞ்சியோ செய்து சாப்பிட, இடுப்பு வலி மற்றும் வயிற்று கடுப்பு பிரச்சனை சரியாகும்.

**வரகு:** அடிப்படை உணவாக வரகரிசி திகழ்கிறது. மேலும் உடலின் சக்தியை அதிகரிக்க உதவுகிறது. இதில் அனைத்து வகையான தின்பண்டங்களையும் செய்யலாம். அதுவும் பிரியாணி செய்வதற்கு ஏற்றது.

பித்த உடம்புக்காரர்கள், சளித்தொல்லையுள்ளவர்கள், தோல் பிரச்சனை உள்ளவர்கள் வரகரிசியை மிகவும் குறைவாக சாப்பிட வேண்டும். தேள் கடிக்கு மருந்தாகவும் பயன்படுகிறது வரகு.

**கேழ்வரகு:** கேழ்வரகில் கஞ்சி, கூழ், களி, தோசை, அடை, லட்டு, அல்வா மற்றும் பக்கோடா என பலவகையான பலகாரங்கள் செய்யலாம். கேழ்வரகில் அதிகளவு கால்சியம் இருப்பதினால் மூட்டுவலி பிரச்சனைக்கு தீர்வாகிறது.

கேழ்வரகு கூழானது மாதவிடாயின் போது ஏற்படும் உதிரப்போக்கை நிறுத்தும் தன்மை கொண்டது.

**கம்பு:** மிகவும் ஆரோக்கியமான கிராமத்து உணவாக இன்று வரை கம்மங்கூழ், தோசை, குழிப்பணியாரம் போன்ற உணவு இடம் பெற்று வருகிறது. கம்பு உடலுக்கு குளிர்ச்சி அளிக்கக்கூடிய சிறுதானிய உணவுகள்.

புரதம் மற்றும் கால்சியம் கம்பில் அதிகம் இருப்பதால் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. அதே சமயம் சளி, இருமல், ஆஸ்துமா மற்றும் தோல் நோய் பிரச்சனை உள்ளவர்கள் கம்பை குறைந்த அளவே உட்கொள்ள வேண்டும்.

சங்ககால மக்கள் சிறுதானியங்களைச் சோறாக அவித்தும், தின்பண்டமாகவும், மாவாக இடித்து இனிப்பு சேர்த்தும் உண்டுள்ளனர். தினையரிசிச் சோற்றை நெய்யில் பொரித்த

தொடர்ச்சி 16 பக்கம்.....

# ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் புதிய வர்த்தக வாய்ப்புகளைத் தூண்டுகின்றது

## பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல்.

Strengthening Economic Ties: President Dissanayake's Visit to India Sparks New Business Opportunities

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் அண்மைய மூன்று நாள் இந்தியாவுக்கான விஜயம், 2024 டிசம்பர் 17ம் திகதி அன்று முடிவடைந்தது, இலங்கையின் பொருளாதார மற்றும் வர்த்தக நிலப்பரப்பை மேம்படுத்துவதற்கானகுறிப்பிடத்தக்கவழிகளைத் திறந்துள்ளது. வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்கும்நிகழ்ச்சிநிரலுடன், வலுவான இந்திய–இலங்கை கூட்டுறவின் பரஸ்பர நன்மைகளை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டியது.

### முக்கிய வணிக ஒப்பந்தங்கள் மற்றும் பொருளாதார முயற்சிகள்

**இரட்டை வரி விதிப்பைத் தவிர்த்தல்.**

இரு நாடுகளிலும் செயல்படும் வணிகங்களுக்கான வரி விதிப்பை எளிதாக்குவதற்கான ஒரு முக்கியமான படியான இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காக ஒரு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் (னிலிஷீ கையெழுத்தானது. இந்த நடவடிக்கை இணக்கச் சுமைகளைக் குறைப்பது மட்டுமல்லாமல், அதிக எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் முதலீட்டை வளர்க்கும்.

**ஆளுகைக்கான திறன் உருவாக்கம்**

நல்லாட்சிக்கான இந்தியாவின் தேசிய மையத்தில் 1,500 இலங்கை சிவில் நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான உடன்படிக்கை இலங்கையில் வணிக நட்புச் சூழலை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. மேம்படுத்தப்பட்ட நிர்வாகத் திறமையானது, முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு பயனளிக்கும், ஒழுங்குமுறைசெயல்முறைகளைமேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி ஆதரவு**

இலங்கையின் கடனை மறுசீரமைப்பதில் இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ×4 பில்லியன் பெறுமதியான அவசரகால நிதியுதவி வழங்குவது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது. இந்த நடவடிக்கைகள் நிதிக் கட்டுப்பாடுகளை எளிதாக்கும், வணிகங்கள் மிகவும் நிலையான மேக்ரோ பொருளாதார சூழலில் செயல்பட அனுமதிக்கும்.

**வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல்**

வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துவதற்குஇந்தியா–இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (ஹாறீய்வீபு)ஆற்றலைஇருநாடுகளும் ஒப்புக்கொண்டன. இலங்கை ஏற்றுமதிகளுக்கு, குறிப்பாக ஜவுளி, மீன்பிடி, மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட விவசாயப் பொருட்களுக்கான இந்தியாவின் பரந்த சந்தைக்கான அணுகலைத் திறக்கக்கூடிய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புஒப்பந்தமாகவிவாதங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின்

### 1. வர்த்தக கூட்டாண்மைகளை விரிவுபடுத்துதல்

இந்திய விஜயம் இலங்கை வர்த்தக சமூகத்திற்கு பல வாய்ப்புகளை உருவாக்கி பல்வேறு துறைகளில் வளர்ச்சியை ஊக்குவித்தது. முக்கிய வாய்ப்புகள் கீழே:

தற்போதுள்ள இந்தியா–இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ஹாறீய்வீபு) கீழ் வர்த்தக உறவுகளை ஆழப்படுத்துவதில் இலங்கைமற்றும்இந்தியாகவனம்செலுத்துவது மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை (சிவீளீபு) ஆராய்வது இலங்கை வர்த்தகங்களுக்கு குறிப்பிடத்தக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வாய்ப்புகளை உருவாக்குகின்றது. முக்கிய பகுதிகள் அடங்கும்:

- ☛ ஜவுளிமற்றும்ஆடைகள்:இந்தியாவின் பரந்த சந்தையானது அதிகமான இலங்கை ஜவுளிகளை, குறிப்பாக உயர்தர முக்கிய தயாரிப்புகளை உள்வாங்க முடியும்.
- ☛ மதிப்பு கூட்டப்பட்ட விவசாய ஏற்றுமதிகள்: பதப்படுத்தப்பட்ட உணவு, மசாலா மற்றும் தேநீர் இந்திய சந்தைகளுக்கு அதிக அணுகலைப் பெறலாம்.
- ☛ மீன்பிடி தயாரிப்புகள்: இலங்கை கடல் உணவு ஏற்றுமதிக்கான சந்தைகளைத் திறக்கும்அதேவேளையில், இந்தியஒத்துழைப்பு நிலையான மீன்பிடி மேலாண்மையை நெறிப்படுத்த முடியும்.

Strengthening Economic Ties: President Dissanayake's Visit to India Sparks New Business Opportunities





AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

### 2. சுற்றுலா மற்றும் விருந்தோம்பலை மேம்படுத்துதல்

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய ஆதாரமாக இந்தியா உள்ளது. சென்னைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான விமானங்கள் மற்றும் விரிவாக்கப்பட்ட படகு சேவைகள் போன்ற மேம்படுத்தப்பட்ட இணைப்புகள் சுற்றுலாவை மேம்படுத்தும்.இதுவாய்ப்புகளைவழங்குகின்றது:

- ☛ இந்தியசுற்றுலாப்பயணிகளைஈர்க்கும் வகையில்வடிவமைக்கப்பட்ட பேக்கேஜ்களுடன் ஹோட்டல்கள் மற்றும் ஓய்வு விடுதிகள்.
- ☛ ஆயுர்வேத சேவை மற்றும் சிகிச்சை போன்ற கலாச்சார மற்றும் ஆரோக்கிய சுற்றுலா அனுபவங்களை வழங்கும் உள்ளூர் வணிகங்கள்.
- ☛ போக்குவரத்து, உள்ளூர் சுற்றுப்பயணங்கள்மற்றும்நினைவுப்பொருட்கள் தயாரிப்பு போன்ற சுற்றுலாத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிறு வணிகங்கள்.

### 3. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முதலீட்டு வாய்ப்புகள்

சூரிய, காற்று மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (ஸிஹிறிறு) திட்டங்களில் இந்தியா–இலங்கை ஒத்துழைப்பு ஆற்றல்

வணிகங்களுக்கான முதலீட்டு வாய்ப்புகளைத் திறக்கின்றது:

☛ பாக்குநீரிணைகடலோரகாற்றாலைகள் போன்றபுதுப்பிக்கத்தக்கஆற்றல்திட்டங்களுக்கு இந்திய நிறுவனங்களுடன் கூட்டுசேர்தல்

☛ உள்ளூர்வணிகங்கள்உபகரணங்கள் வழங்கல், கட்டுமானம் மற்றும் ஆற்றல் திட்டங்களின் பராமரிப்பு போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடலாம்.

பிராந்திய ஆற்றல் மையமாக திருகோணமலையைஅபிவிருத்திசெய்வதற்கான வாய்ப்புகள்.

## 4. டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி

டிஜிட்டல் உருமாற்றத்தில் இந்தியாவின் நிபுணத்துவம் இலங்கை வணிகங்களுக்கு செயல்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கானபாதைவரைபடத்தை வழங்குகின்றது. முக்கிய வாய்ப்புகள்:

☛ சேவைகள் மற்றும் நிர்வாகத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (ரீஸிஷீம்ணு) திட்டத்தில் ஒத்துழைத்தல்.

☛ இலகுவான டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு ஷீணேணு போன்ற கட்டண முறைகளை செயல்படுத்துதல், இ-காமர்ஸ் மற்றும் சில்லறை விற்பனைக்கு பயனளிக்கும்.

☛ ணுவீ, உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் தளங்களை உருவாக்க இந்திய தொழில்நுட்பநிறுவனங்களுடன்கூட்டுசேர்ந்து இயங்கக்கூடிய சந்தர்ப்பம் .

☛ ஸ்டார்ட்அப்கள்'ஸ்டார்ட்அப் இந்தியா' முயற்சியின் மூலம் இந்திய வழிகாட்டிகள் மற்றும்நிறுவனங்களுடன்ஒத்துழைக்கமுடியும்.

## 5. உட்கட்டமைப்பு மற்றும் இணைப்பில் முதலீடுகள்

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்திசெய்தல்மற்றும்படகு சேவைகளை மேம்படுத்துதல், தளவாடங்கள் மற்றும் வர்த்தகத்திற்கு நன்மைகள் போன்ற மேம்படுத்தப்பட்ட இணைப்புகள். முக்கிய வாய்ப்புகள்:

☛ துறைமுகம்தொடர்பானவணிகங்கள் சரக்கு கையாளுதல் மற்றும் கப்பல் போன்ற சேவைகளை விரிவுபடுத்தலாம்.

☛ விமானநிலையங்கள்,துறைமுகங்கள் மற்றும் இரயில்வே அமைப்புகளை மேம்படுத்தி நவீனமயமாக்குவதில் கட்டுமான நிறுவனங்கள் பங்கேற்கலாம்.

## 6. விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு

விவசாய நவீனமயமாக்கலில் இந்திய உதவி பலனளிக்கும்

☛ தானியங்கு விவசாய உபகரணங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகள் போன்ற அக்ரிடெக்தீர்வுகளில்ஈடுபட்டுள்ளநிறுவனங்கள்.

☛ உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு பால் பண்ணை, மீன்வளர்ப்பு மற்றும் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள்.

☛ அதிக விளைச்சல் தரும் பயிர்கள் மற்றும் நிலையான விவசாயத்திற்கான யூ&ம் இல் இந்திய நிறுவனங்களுடன் கூட்டு.

## 7. கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி ஒத்துழைப்பு

கடன் மறுசீரமைப்பு மற்றும் ணுஹியூ-ஸிலுயூ வர்த்தக தீர்வுகளை ஊக்குவிப்பதில் இந்தியாவின் ஆதரவு நிதி வாய்ப்புகளைத் வழங்குகின்றது:

☛ வங்கிகள் உள்ளூர் நாணயங்களில் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளை எளிதாக்கலாம், அந்நிய செலாவணி சார்ந்திருப்பதைக் குறைக்கலாம்.

☛ முதலீட்டாளர்கள் தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் கடன்-நிதி திட்டங்களில் கூட்டு முயற்சிகளை ஆராயலாம்.

## 8. கலாச்சார மற்றும் மத சுற்றுலா

கலாச்சார மற்றும் மத சுற்றுலாவை இலக்காகக் கொண்ட சுற்றுலா உட்கட்டமைப்பில் முதலீடுகள் வாய்ப்புகளை வழங்குகின்றன:

☛ வணிகங்கள், குறிப்பாக புத்த மற்றும் இந்துத் தலங்களுக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்காக, யாத்திரைச் சுற்றுலாக்களை வழங்குகின்றன.

☛ முக்கிய மதத் தலங்களுக்கு அருகிலுள்ள ஹோட்டல்கள் மற்றும் ஓய்வு விடுதிகளைஉருவாக்குவதற்கானவிருந்தோம்பல் மற்றும் ரியல் எஸ்டேட்டில் முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன.

## 9. மீன்வளம் மற்றும் கடல்சார் மேம்பாடு

நிலையான மீன்பிடி மற்றும் கடல்சார் பாதுகாப்பிற்கான ஒத்துழைப்புகள் இதற்கான வழிகளை உருவாக்குகின்றன:

☛ இந்திய சந்தைகளுக்குள் நுழைய அதிக மதிப்புள்ள மீன்பிடி பொருட்களை ஏற்றுமதி செய்பவர்கள்.

☛ பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம் போன்ற துறைமுக அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளூர் வணிகங்கள் ஈடுபடக்கூடிய சிறந்த வாய்ப்பு.

☛ இந்தியாவில் காணப்படுகின்ற பல்வேறு கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் சேவைகளில் கூட்டாண்மை.

## 10. பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துதல்

இந்தியப்பெருங்கடல்பிராந்தியத்தில்முக்கிய பங்கு வகிக்கும் இலங்கையின் நிலைப்பாடு வணிகங்கள் பிராந்திய முயற்சிகளில் ஈடுபடுவதற்கானவழிகளைஉருவாக்குகின்றது:

☛ கொழும்புபாதுகாப்புமாநாடுபோன்ற பிராந்தியகடல்சார்பாதுகாப்புஒத்துழைப்புகளில் பங்கேற்பது.

☛ யணுானிறீவீசிளீ மற்றும் ணுநுயூபு போன்ற கட்டமைப்பின் கீழ் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்தல்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் பல வாய்ப்புகளை உருவாக்கியுள்ள அதேவேளை, இருதரப்பு உறவுகள்உருவாகும்போது இலங்கை வர்த்தக சமூகத்தை பாதிக்கக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்கள்அல்லதுசவால்களைகருத்தில் கொள்வதும் விவேகமானதாகும். இங்கே சில முக்கிய அச்சுறுத்தல்கள் உள்ளன:

## 1. இந்திய வர்த்தக நிறுவனங்களிடமிருந்து அதிகரித்த போட்டி

சந்தை ஆதிக்கம்: இந்திய நிறுவனங்கள், அவற்றின் அளவு, மூலதனம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவற்றிலிருந்து பயனடைகின்றன, சில்லறை வணிகம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில் இலங்கை வணிகங்களை விஞ்சலாம்.

சந்தைப் பங்கின் இழப்பு: பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (சிவீளீபு) போன்ற விரிவாக்கப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் இந்தியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் வருகை உள்ளூர் தொழில்கள், குறிப்பாக றீனிசி களுக்கு அழுத்தம் கொடுக்கலாம்.

## 2. இந்தியாவைச் சார்ந்திருத்தல்

இறக்குமதியில் அதிக நம்பகத்தன்மை: ஒரு நெருக்கமான வர்த்தக உறவு, இலங்கையின் வர்த்தக சமநிலையை பாதிக்கும், இந்திய இறக்குமதிகள் மீது அதிக தங்கியிருக்க வழிவகுக்கும்.

மூலோபாய பாதிப்புகள்: இந்திய ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் முதலீடு ஆகியவற்றைச் சார்ந்திருப்பது இலங்கையை வெளிப்புற அதிர்ச்சிகள் அல்லது இந்தியாவில் கொள்கை மாற்றங்களுக்கு ஆளாக்கக்கூடும்.

## 3. உள்ளூர் தொழில்களுக்கு அச்சுறுத்தல்கள்

விவசாயம்: இந்திய விவசாய



ஏற்றுமதிகள், மானிய பொருட்கள் உட்பட, வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் சரியாக நிர்வகிக்கப்படாவிட்டால், உள்ளூர் விவசாயிகளுக்கு தீங்கு விளைவிக்கும்.

உற்பத்தி: இலங்கை சந்தையில் நுழையும் இந்திய உற்பத்தி நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்தி, குறிப்பாக ஜவுளி, நுகர்வுப்பொருட்கள் மற்றும் மின்னணுவியல் உற்பத்தியை முடக்கலாம்.

## 4. செயல்படுத்தும் அபாயங்கள்

தாமதமான திட்டங்கள்: ஆற்றல், உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுலா ஒத்துழைப்பு ஆகியவற்றின் வெற்றியானது, சரியான நேரத்தில்செயல்படுத்தப்படுவதைப்பொறுத்தது. இலங்கையில் அதிகாரத்துவ திறமையின்மை அல்லது அரசியல் ஸ்திரமின்மை இந்திய முதலீட்டாளர்களைத் தடுக்கலாம் மற்றும் திட்டமிடப்பட்ட திட்டங்களை சீர்குலைக்கலாம்.

## 5. தொழிலாளர் சந்தை அழுத்தங்கள்

போதிய உள்ளூர் பங்கேற்பு: உள்ளூர் கூட்டாண்மைக்கானதெளிவானகட்டமைப்புகள் இல்லாததால், இந்திய நிறுவனங்கள் தலைமையிலான பெரிய அளவிலான திட்டங்களில் இலங்கை வணிகங்கள் ஓரங்கட்டப்படலாம்.திறமையான தொழிலாளர் இடம்பெயர்வு:இலங்கைக்குள்நுழையும்இந்திய நிறுவனங்கள் சிறந்த ஊதியத்துடன் உள்ளூர் திறமைகளை ஈர்க்கக்கூடும், இது இலங்கை வணிகங்களுக்கு திறன் பற்றாக்குறையை உருவாக்குகின்றது.

சமமற்றவேலைவாய்ப்புகள்:திட்டங்களுக்கு

## 6. நிதி அச்சுறுத்தல்கள்

இந்திய தொழில் வல்லுநர்கள் அல்லது தொழிலாளர்கள் மீது அதிக நம்பிக்கை வைப்பது உள்ளூர் பணியாளர்களுக்கான வாய்ப்புகளை குறைக்கலாம்.

நாணய ஏற்ற இறக்கம்: ஞூஹியூ-ஸிலுயூ வர்த்தகதீர்வுகளுக்கு முக்கியத்துவம்கொடுப்பது, இந்திய ரூபாயில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டாலோ அல்லது இருதரப்பு வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தாலோ, இலங்கைக்கு ஆபத்துகள் ஏற்படலாம்.

கடன் அபாயங்கள்: கடன் மறுசீரமைப்பில் இந்தியாவின்ஆதரவுஉதவிகரமாகஇருந்தாலும், பொருளாதார மீட்சி பின்தங்கினால், இந்தியக் கடன்வரிகளைஅதிகமாகச்சார்ந்திருப்பதுநீண்ட கால கடன் சுமைகளை அதிகப்படுத்தலாம்.

எல்லை தாண்டிய தகராறுகள்: பாக்குநீரினையில் இந்திய மற்றும் இலங்கை

## 7. மீன்பிடி பிரச்சினைகள்/மோதல்கள்

மீனவர்களுக்குஇடையேநிலவும்பிரச்சினைகள் அதிகரித்து, இருதரப்பு உறவுகளை பாதிக்கும் மற்றும் மீன்பிடித் துறையில் வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும்.

அதீத மீன்பிடித்தல்: மீன்பிடியில் அதிகரித்த ஒத்துழைப்பு, அதிகப்படியான மீன்பிடிப்புக்கு வழிவகுக்கும், கடல் சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் மீன்பிடி வணிகங்களுக்கு தீங்கு விளைவிக்கும்.

தரவு தனியுரிமை கவலைகள்: இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (ரீஷஷ்

## 8. தொழில்நுட்ப சவால்கள்

ஸிழிஜவழி ஷீஜஷ்ஸூற்ள ம்ஷ்ஆஷ்மிழியி ஞூ-ளஜமிஷ்மிதீ – ரீஸிஷீம்ஞூ) திட்டத்தை நடைமுறைப்படுத்துவது போன்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு தொடர்பான ஒத்துழைப்புகள், தரவு இறையாண்மை மற்றும் பாதுகாப்பு பற்றிய கவலைகளை எழுப்பலாம்.

சமமற்ற தொழிநுட்ப முன்னேற்றம்: தொழில்நுட்பத்தில் இந்திய மேலாதிக்கம் இலங்கைஞூவீஸ்டார்ட்அப்களின்வளர்ச்சியை மறைத்து, அவர்களின் உலகளாவிய போட்டித்தன்மையை மட்டுப்படுத்தலாம்.

இந்தியா-சீனா போட்டி: இந்தியாவுடனான இலங்கையின் நெருக்கமான இணக்கமானது

## 9. பிராந்திய புவிசார் அரசியல் அபாயங்கள்

சீனாவுடனான அதன் உறவை சீர்குலைத்து, சீன முதலீடுகள் மற்றும் வர்த்தக உறவுகளை பாதிக்கும்.

இந்தியப் பெருங்கடல் பதட்டங்கள்: கடல்சார் பாதுகாப்பில் பகிரப்பட்ட ஆர்வம் இலங்கையை பிராந்திய அதிகாரப் போராட்டங்களில் சிக்க வைக்கலாம், இது வர்த்தக நம்பிக்கையை பாதிக்கும் உறுதியற்ற தன்மையை உருவாக்குகின்றது.

பொது எதிர்ப்பு: இந்திய வணிகங்களின் ஆதிக்கம் அல்லது கலாச்சார செல்வாக்கு

## 10. கலாச்சார மற்றும் சமூக உணர்வுகள்

உள்ளூர் சமூகங்களின் எதிர்ப்பை எதிர்கொள்ளலாம், அரசியல் மற்றும் சமூக பதட்டங்களை உருவாக்குகின்றது.

சுற்றுலாசெறிவு:இந்தியசுற்றுலாப்பயணிகள் மீது அதிக கவனம் செலுத்துவது மற்ற சர்வதேச சந்தைகளில் பல்வகைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை மறைக்கக்கூடும்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் சமீபத்திய இந்திய விஜயம் சந்தேகத்திற்கு இடமின்றி வர்த்தகம், சுற்றுலா, எரிசக்தி மற்றும் டிஜிட்டல் மாற்றம் போன்ற துறைகளில் இலங்கை வர்த்தக சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க வாய்ப்புகளைதிறந்துவைத்துள்ளது.இருப்பினும், இந்த வாய்ப்புகள் அதிகரித்த போட்டி, சார்பு அபாயங்கள் மற்றும் உள்ளூர் தொழில்கள் மற்றும் இறையாண்மைக்கு சாத்தியமான அச்சுறுத்தல்கள் உட்பட சவால்களுடன் வருகின்றன.

அச்சுறுத்தல்களைத் தணிக்கும் அதே வேளையில் இந்த வலுவூட்டப்பட்ட பங்காளித்துவத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு, இலங்கையின் வர்த்தக சமூகம்ஒருசெயலூக்கமானஅணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். போட்டித்தன்மையை மேம்படுத்துதல், ஏற்றுமதி சந்தைகளை பல்வகைப்படுத்துதல், புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் கூட்டுத் திட்டங்களில் செயலில் பங்கேற்பதை உறுதி செய்தல் ஆகியவை இன்றியமையாத படிகளாகும். அதே நேரத்தில், கொள்கை வகுப்பாளர்கள் சமநிலையான ஒப்பந்தங்களை உருவாக்க வேண்டும், உள்ளூர்தொழில்களைப்பாதுகாக்க வேண்டும் மற்றும் சமமான வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். இந்தப் பயணம் இந்தியாவுடன் பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மைக்கு களம் அமைத்துள்ளது. சாத்தியமான சவால்களை எதிர்கொள்வதன் மூலம், இலங்கை தனது பொருளாதார மீட்சி மற்றும் நீண்ட கால வளர்ச்சியை உறுதிசெய்து, பிராந்திய மற்றும் உலகளாவிய சந்தையில் வலுவான நிலையைப் பெற முடியும்.

**இன்றும்கூட, சமைத்த உணவில் ஏதாவது நஞ்சு இருந்தால் அதை வாழை இலை நீக்கிவிடும்.. அதனால்தான், பாம்பு கடித்தால் முதலுதவியாக வாழையின் மட்டையில் இருந்து சாறு பிழிந்து தான் தருவார்கள்... அதன் அடிக் கிழங்கில்இருந்துசுரக்கும்நீரைத்தரு வார்கள்...**

**திருமணம் போன்ற அனைத்து சுபகாரியங்களிலும்வாழைஇலையில் விருந்துபரிமாறுகிறார்களே,அதற்கு ஏன்என்றுஎன்றாவதுவிருந்துசாப்பி டும் போது சிந்தித்திருக்கிறீர்களா?**

# தமிழர்களின் தனிச்சிறப்புமிக்க பாரம்பரியத்தில் ஒன்று வாழை இலை விருந்து.

அமுதன்



அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முதல் காரணம் வாழை இலை விருந்துக்கு சமைத்தஉணவில்ஏதாவதுநஞ்சுஇருந்தால் அதை வாழை இலை நீக்கிவிடும்.

நம்பமுடியவில்லையா.. இன்றும் கிராமங்களில்பாம்புகடித்தால்முதலுதவியாக வாழையின் மட்டையில் இருந்து சாறு பிழிந்துதான் தருவார்கள். அதன் அடிக் கிழங்கில்இருந்துசுரக்கும்நீரைத்தருவார்கள் .அதற்காகத்தான் பெருவாரியாக மக்கள் கூடும் கோயில் திருவிழாக்கள் மற்றும் திருமணம் இன்னும் சொல்லப்போனால் சில பகுதியில் இறப்பு வீடுகளிலும் கூட முதலுதவி இருக்கவேண்டும் என்று தயாராக வாழையை மங்களகரம் என்று கூறி கட்டிவைப்பார்கள் .

திருமணப் பந்தலிலும் வாழை மரம், இடுகாட்டுப்பாடையிலும்வாழைமரம்,மக்கள் கூடும் எந்த திருவிழாக் கூட்டங்களிலும் வாழை மரம் என்று எங்கெங்கு காணினும் வாழை மரத்தை வைத்தார்கள் தொல் தமிழர்கள் .



அதாவது நச்சு முறிப்புக்கு என்றுதான் முதலுதவிக்குஅவ்வாறுசெய்துவைத்தார்கள். எத்தகைய அமங்கலமும் நடக்காமல் இருந்தால் அது மங்கலம் தானே! இவ்வாறு தொல் தமிழ் மக்கள் எதையும் அறிவியல் பூர்வமாகவே செய்திருக்கிறார்கள் .

வாழை இலையில் உண்பது நஞ்சு நீக்க மட்டும் காரணம் அல்ல. வாழை இலையில் ஆன்டி ஆக்சிடன்ட் அதிக அளவில் இருக்கிறது. இதனால் உடலின் செல் சிதைவு ஏற்படாமல் இளமையுடன் இருக்க முடியும். அதோடு மன அழுத்தம், புற்றுநோய் மற்றும் இதய நோய்களும் தடுக்கப்படுகின்றன.

சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டுசாறுஉகந்தது என்பது போல, வாழை இலையும் சிறுநீரகம் மற்றும் விதைப்பை தொடர்புடைய பிரச்னைகளிலிருந்து நம்மை பாதுகாக்கிறது.

சூடான சாப்பாட்டை வாழை இலையில் பரிமாறும்போது அந்த சூட்டில் இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில்உள்ளபாலிபீனால்சாப்பாட்டில் கலந்து விடும். இதன் மூலம் அதில் உள்ள விட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன.

வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல் நீண்டநாட்கள் தலைமுடி கருப்பாக இருக்கும். வாழை இலையின் சிறப்பம்சமே அதன் குளிர்ச்சித் தன்மைதான். மரத்திலிருந்து அறுத்தெடுக்கப்பட்ட பின்பும் கூட வாழைஇலை ஆக்சிஜனை வெளியிட்டுக்கொண்டே இருக்கும்.

வாழை இலையில் வைக்கப்படும் கீரைகள், காய்கள், பழங்கள், பூக்கள் ஆகியவை விரைவில் வாடாது. அதனால் தான் சமீப காலம் வரை பூக்கடைகளில் கட்டிய பூ வாங்கினால் அதை வாழை இலையில் தான் கட்டித் தருவார்கள்

சித்த மருத்துவம்: எப்படி பரிமாறுவது, பிறகு,அதைஎந்தவரிசையில்உட்கொள்வது என்பது குறித்தும், அதன் உன்னதம் குறித்தும் சித்த மருத்துவத்தில் அன்றைய காலத்திலேயே சொல்லப்பட்டுள்ளதாம்.

முதலில் நுனி இலையிலிருந்து உப்பு, சட்டினி, ஊறுகாய், பச்சடி, காய்கறி, வடகம், வடை, சித்திரான்னம், அப்பளம், போன்றவற்றை பரிமாற வேண்டும்.. அதன் பக்கத்திலேயே மூன்று வாழை இலை தொன்னைகளில், தனித்தனியே கூட்டு, ரசம், குழம்புகளை ஊற்றி, பனியாரம், பாயாசம் வைத்து இறுதியாக, சோறும் அதன் அருகில் மற்றொரு தொன்னையில் நெய்யும் வைத்து உபசரிக்க வேண்டுமாம். வாழையிலையில் உண்பதால் ஆயுள்



கூடும் என்கிறார்கள்.. எப்படி தெரியுமா?

குடற்புண்கள்: வாழையி லையில், பொட்டாசியம், கால்சியம், மெக்னீசியம், சோடியம், பாஸ்பரஸ், துத்தநாகம் மற்றும் செம்பு சத்துக்கள் உள்ளன.. இவைகள் கண்களை பாதுகாத்து, எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.. வைட்டமின் ஏ.சி, மற்றும் கே விட்டமின்கள் குடற்புண்களை ஆற்றும்.. ஆல்வான்பியின் கிருமிகளை அழிக்கும் பீனால், ரத்தம் உறைவதைத் தடுக்கும்.. சாலிசிலிக் அமிலம் புற்றுநோய் காரணிகளை அழிக்கும்.. இத்தனையும் வாழை இலையின் மேல்புறத்தில் உள்ள குளோரோபில் என்னும் பொருளுடன் பின்னி பிணைந்துள்ளன.

நீரை தெளித்து வாழை இலையை கழுவி, அதன் மேல் நெய்யை தடவி, இலையில் சூடான உணவுகளை வைக்கும் போது, இலையில் சத்துக்களெல்லாம் குளோரோபில்லுடன் கரைந்து, உணவுடன் கலந்து விடுகின்றன. இதெல்லாம் சேர்ந்துதான் நமக்கும் ஆயுளை கூட்டுகிறது.

பச்சையம்: சூடான சாப்பாட்டை வாழை இலையில் பரிமாறும்போது அந்த சூட்டில் இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில் உள்ள பாலிபீனால் சாப்பாட்டில் கலந்து விடும். இதன் மூலம் அதில் உள்ள விட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன. வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல் நீண்ட நாட்கள் தலைமுடி கருப்பாக இருக்கும்.

வயிற்று புண்ணை குணமாக்கும் வாழை இலையின் குளோரோபில் செல்கள் நீண்ட காலம் அழியாமல் இருக்கக் கூடியவையாம்.. அதுமட்டுமல்லாமல், வாய், இரைப்பை, சிறுகுடல் போன்ற பகுதிகளில் உள்ள என்சைம்கள் மற்றும் செரிமான செல்களின் வளர்ச்சி மற்றும் உற்பத்திக்கு பேருதவி புரிகின்றன..

வாழைத்தண்டு: வாழை இலையில் ஆன்டி ஆக்சிடன்ட் அதிக அளவில் இருக்கிறது. இதனால் உடலின் செல் சிதைவு ஏற்படாமல் இளமையுடன் இருக்க முடியும். மன அழுத்தம், புற்றுநோய் மற்றும் இதய நோய்களும் இதனால், தடுக்கப்படுகின்றன. சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டு சாறு உகந்தது என்பது போல, வாழை இலையும் சிறுநீரகம் மற்றும் விதைப்பை தொடர்புடைய பிரச்னைகளிலிருந்து நம்மை பாதுகாக்கிறது.

அல்சர் நோயினால் ஏற்பட்ட வயிற்று புண்களையும் வாழை இலை துரிதமாக ஆற்றக்கூடியவை.,. சிறுகுடலில் தோன்றிய புண்களின் அழுகிய சதைகளை கரைத்து விட்டு, புதிய செல்களையும் தோற்றுவிக்கக்கூடியவை. அதனால்தான், நமக்கு நெருப்பில் சுட்ட புண்களை ஆற்றுவதற்காக, தீப்பட்ட இடத்தில் வாழை இலையைச் சுற்றுவது வழக்கமாக இருந்திருக்கிறது.

இன்றும்கூட, சமைத்த உணவில் ஏதாவது நஞ்சு இருந்தால் அதை வாழை இலை நீக்கிவிடும்.. அதனால்தான், பாம்பு கடித்தால் முதலுதவியாக வாழையின் மட்டையில் இருந்து சாறு பிழிந்துதான் தருவார்கள்... அதன் அடிக்கிழங்கில் இருந்து சுரக்கும் நீரைத்தருவார்கள்...

பாடையிலும் வாழை: அதனால்தான், பெருவாரியாக மக்கள் கூடும் கோயில் திருவிழாக்கள், கல்யாணங்கள், போன்ற இடங்களில் வாழை மரங்கள் முதலுதவிக்காக கட்டி வைப்பார்கள்.. உயிருக்கு ஆபத்தான நேரத்தில், மங்களகரம் என்று சொல்லி கட்டி வைக்கும் இந்த வாழைதான் உயிரை காப்பாற்றக்கூடியது. அவ்வளவு ஏன், இடுகாட்டுப் பாடையிலும் கூட வாழை மரம் கட்டி வைப்பார்கள்.

கெட்டுப்போன அல்லது விஷம் கலந்த உணவுகளை வாழை இலையில் வைத்தால், அந்த இலையின் மேற்புறத்தில் புதிய நிறத்தில் ஒரு வித நீர் உற்பத்தியாகி, இலையில் ஒட்டாமல் வடிந்து விடும்.. இதை வைத்தே உணவின் விஷத்தன்மையை அறிந்து கொள்ளலாம்.. அதனால்தான், விருந்துக்கு எதிரியே அழைத்தாலும் தலை வாழை இலையில் தைரியமாக சாப்பிடலாம் என்று நம்முடைய முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.

அறுபட்ட இலை: வாழை இலை அறுபட்ட பிறகும் கூட, எப்போதுமே குளிர்ச்சியாக இருக்கும்.. அதாவது வாழை இலை ஆக்சிஜனை வெளியிட்டுக்கொண்டே இருக்கும்... வாழை இலையில் வைக்கப்படும் கீரைகள், காய்கள், பழங்கள், பூக்கள் போன்றவை விரைவில் வாடாது... பூக்கடைகளில் கட்டிய பூ வாங்கினால் கூட, அதை வாழை இலையில் தான் கட்டித்தருவார்கள்.. ஆகமொத்தம், இந்த வாழை என்றுமே நம்மை வாழையடி வாழையாக வாழ வைக்கும்..!!

# ஆடுகளும் நாய்களும்



சிவபாத சுந்தரலிங்கம்
கிருபானந்தகுமரன் – *(BVSc, MVS)*
கால்நடை மருத்துவர்

சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் இது.எனது அலுவலகத்துக்கு அருகில் ஒரு பொலிஸ் ஸ்ரேசன் உள்ளது. அங்கு 50-60 பொலிசார் வரை பணி புரிகின்றனர். அவர்களின் உணவு மீதிகளை உண்பதற்காக அருகிலுள்ள வீட்டு வளர்ப்பு நாய்களும் தெரு நாய்களும் அடிக்கடி வருவதை வாடிக்கையாக கொண்டிருக்கும்.சில நாய்கள் அங்கேயே நிரந்தர வசிப்பிடமாக மாற்றியும் இருக்கின்றன.

அந்த பகுதியின் குடிமக்கள் ஆடு வளர்ப்பை அதிகமாக செய்பவர்கள். காலை 10-11 மணி வாக்கில் திறந்து விடப்படும் ஆடுகள் மாலை 5-6 மணிவரை வீதிகள் மற்றும் ஏனைய மேய்ச்சல் பகுதிகளில் மேய்ந்து விட்டு திரும்பும்.இது வழமையான நடை முறை.

அண்மைக்காலமாக, அங்குள்ள ஆடு வளர்ப்பாளர்கள் நாய்களால் கடிக்கப்பட்ட ஆடுகளைக் கொண்டு வருவார்கள். குட்டிகளும், சினைப்பட்ட ஆடுகளும் அதிகளவில் இலக்காக இருக்கும்.அநேகமான சம்பவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நாய்களால் மேற்க்கொள்ளப் பட்டதாக அறிய முடிந்தது.சில ஆடுகள் மீட்க முடியாத வகையில் கடிக்கப் பட்டிருக்கும்.நுரையீரல்,இரப்பை,குடல் என முக்கிய உறுப்புகள் சிதைக்கப் பட்டிருக்கும்.

அன்று நடந்த சம்பவத்துக்கு வருகிறேன்.அலுவலகத்திலிருந்து வெளி வேலைக்கு செல்ல வாகனத்தில் ஏறும் போது அந்த சம்பவம் நடந்தது. அப்போதுதான் ஆடுகள் திறக்கப் பட்டிருந்தன. 5-6 ஆடுகள் வீதிகளில் இருந்த இலை குழைகளை உண்டபடி அலுவலகத்தை கடந்து ஒரு சத்தியில் திரும்பின.

பொலிஸ் நிலையத்தில் நின்ற நாய்கள் ஒவ்வொரு திசையாக முன்னேறி அந்த சந்தியில் ஆடுகளைத் திரும்ப விட்டு அந்த ஆட்டுக் கூட்டத்தில் சினைப்பட்டிருந்த ஆட்டை இலக்கு வைத்து கடிக்கத் தொடங்கின. ஒரு நாய் கழுத்தைக் கடிக்க இன்னொன்று பின் காலை கடித்து இழுத்தது.

வேதனையில் நிற்க முடியாமல் ஆடு நிலத்தில் விழ ஏனைய நாய்கள் ஈ மொய்த்தது போல அதனைக் கடித்து குதறின. இவையனைத்தும் ஓரிரு விநாடிக்குள்ளேயே நடந்தேறின.

நாங்கள் ஓடிச் சென்று சத்தமிட்டுக் கலைக்க முயன்ற போது நாய்கள் வெறிப்பிடித்த பேய்கள் போல செயற்பட்டன.உறுமின.எம்மை நெருங்கவே விடவில்லை.



அண்மையில் நான் பார்த்த netflix தளத்தின் predator எனும் webseris இல் காட்டு நாய்கள் ( Ghosts) இரைகளை வேட்டையாடுவது போன்ற ஒரு காட்சியை அந்த நாய்கள் நிகழ்த்திக் கொண்டிருந்தன. சகலதும் ஒருங்கிணைந்த தாக்குதல். சிறப்பாக புலனாய்வு செய்யப்பட்ட தாக்குதல்.பலவீனமான ஆட்டை மிகப் பொருத்தமான இடத்தில் தாக்கியிருந்தன.ஒவ்வொரு நாய்க்கும் ஒவ்வொரு பொறுப்பு என்ற மாதிரியான தாக்குதல் திட்டம்.

நாய்கள் ஓநாயிலிருந்தே கூர்படைந்தன என்பது நாய்களின் பரிணாம வளர்ச்சியின் ஒரு கருதுகோள். ஓநாய்கள் தமது இரையை கூட்டமாகச் சென்று வேட்டையாடுமாம். ஓநாய்கள் நாய்களாக மாறி பல மில்லியன் ஆண்டுகளாகிய போதும் அவற்றின் மூதாதை இயல்பு மாறவில்லை என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

அருகில் நின்ற ஒருவர் கற்களாலும் கையில் கிடைத்த தடியாலும் நாய்களை அடித்து விரட்டிய போதும் ஆட்டின் குடல் இரப்பை என பல பகுதிகள் கிழிந்து தொங்கின. கற்களாலும் தடியாலும் அடிபட்ட நாய்கள் சற்றுத் தொலைவில் சென்று அந்த ஆட்டையே பார்த்துக் கொண்டு நின்றன. ஆட்டின் உரிமையாளருக்கு அறிவித்துவிட்டு ஆட்டை அருகிலிருந்தவரை அலுவலகத்துக்கு கொண்டுவரச் சொல்லி சிகிச்சையை தொடங்கினேன்.உரிமையாளர் அருகிலிருந்த வீட்டுக்காரர் என்றபடியால் உடனடியாகவே வந்துவிட்டார். ஆடு நிறை சினையுமில்லாத காரணத்தால் குட்டியை எடுக்கும் நிலையும் இருக்கவில்லை.முடிந்தவரை காயங்களைத் தைத்தேன். ஏற்பூசி போட்ட பின் ஆட்டின் நிலையின் நிச்சயமில்லாத தன்மையைக் கூறி அனுப்பி வைத்தேன். ஆட்டின் உரிமையாளர் சொன்னார்

‘சேர்! இந்த இரண்டு மாசத்தில இந்த சனி நாய்கள் என்ர 3 ஆட்ட சாக் கொல்லீட்டுகள். ஊருக்குள்ள கனக்க பேர்ட ஆடுகளை பிடிச்சிட்டுகள்.இதுகள் நாய்களில்ல .பேய்கள்.பொலிஸ் காரங்கள் சாப்பாடு போட வீட்டு நாயெல்லாம் அங்க போய்ட்டுகள்.யார்ட்ட சொல்றது.நாங்க இனி ஆடு வளர்க்க ஏலாது‘

இது நடந்து இரண்டு மணித்தியாலயத்துக்கு பின் ஒரு பெண்மணி நாய் ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். யாரோ அடித்து கால் முறிந்து போய்ட்டுதாம். நாயை உற்று நோக்கிய போது அந்த ஆட்டைக் கடித்த நாய்களில் ஒன்று. ஆட்கள் அடித்த அடியில் அதன் இடது புற கால் உடைந்து போயிருக்கிறது. தொடும்போது வேதனையால் முனகியது. ஒரு தேங்காய் அளவுக்கு கால் வீங்கியிருந்தது. மயக்கமடையச் செய்து முடிந்த சிகிச்சையை செய்து அனுப்பினேன். நாயின் உரிமையாளர் என்னிடம்

‘இது அப்பாவி நாய் சேர்.!யாரையும் கடிக்காது. கொஞ்ச நாளா ஆளக் காண இல்ல.பெட்ட நாய்கள் மறியில திரியிற நாளில் ஆள் இப்பிடித்தான். வீட்ட நிக்காது. இண்டைக்குதான் இப்பதான் ஆள் வந்திருக்கு. வீட்டு பின் பக்கத்தில ஒளிஞ்சு படுத்திருந்த்து. கூப்பிட்டு பார்த்தா நொண்டி நொண்டி ஓடிட்டு.காலத் தொட கத்திச்சு. யாரோ அடிச்சிட்டாங்கள் போல. அறுவானுகள்.வாயில்லா ஜீவன இப்பிடியா அடிக்கிறது. அடிச்சவனுகள மிருக வதைச் சட்டத்தில பிடிக்கோனும்.பொறுங்கோ பேஸ்புக்கில போடுறன்.! ‘

கடிச்ச நாயையும் பார்த்தேன்.கடி வேண்டின ஆட்டையும் பார்த்தேன்.இரண்டுக்கும் இரண்டு கதைகள்.இரண்டையும் சிகிச்சையளித்தேன். இதற்கு பிறகும் பல கடிபட்ட ஆடுகள் வந்தன.அடி வேண்டின நாய்களும் வந்தன.

# சங்க....

6 பக்க தொடர்ச்சி....

இறைச்சியுடன் சேர்த்து உணவாக உண்டனர் என்பதை,

பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர் (மலைபடு. 168-169)

என மலைபடுகடாம் பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

ஆடு, மாடுகளை மேய்த்தல் தொழிற்புரியும் ஆயர்குலப்பெண்கள்மோர்,நெய்ஆகியவற்றை விற்று, பின் கடும்பசியுடன் தன் வீட்டை அடைவாள். அவள் தினையால் ஆக்கிய சோற்றைப்பாலுடன்சேர்த்துஉண்பாள்என்பதை பெரும்பாணாற்றுப்படை(பெரும்பாண்.100-103) உணர்த்துகின்றது.

தினைக்கதிர், எள், வரகு ஆகிய உணவுப்பொருட்கள் நிறைந்து காணப்பட்டதை மதுரைக்காஞ்சி (மதுரை.292-293) குறிப்பிடுகின்றது.

முள்வேலியுடைய தோட்டத்தில் ஆடு தின்று மீதமுள்ள முன்னைக்கீரை இலையைப் பறித்து சாறாக்கி வரகுச் சோற்றுடன் உண்டனர் என்பதினை,

இடுமுள் படப்பை மறி மேய்ந்து ஒழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங் கண் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு, பெறூஉம் (புறம். 197:10-12)

என புறப்பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

சிறுதானிய வகைகளுள் வரகு முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு வரகு அரைப்புறுகிறது. அ..தாவது வரகு குற்றப்படுகிறது. இதனால் கிடைப்பது வரகரிசி. கதிரிலிருந்து பெறப்பட்ட வரகினைக் குற்றி அரிசியாக்குகின்றார்கள். அதுவே வரகின் பச்சரிசி. இதை சோறாக்கினால் இது விரைவாக குழைந்துப்போகும். இதனால் இவற்றைதயிருடன்சேர்த்துஉண்டிருக்கின்றனர்.

இதை,

கவைக் கதிர் வரகின் அவைப்புறு ஆக்கல்
தாதுஎ மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண் தயிர்க் கொளீடு,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை (புறம். 215:1-4)

புறப்பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

பண்டைய உணவுப் பண்பாட்டில் வரகரிசிச் சோறு முதன்மையாக இடம்பெற்றிருந்ததை ஔவையின் தனிப்பாடல் திரட்டில் (32-வது வெண்பா) குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் புல்வேலூரைச் சேர்ந்த பூதன் என்பவன் ஔவைக்கு வரகரிசி உணவளித்த செய்தியைக் காணலாம். அவன் அளித்த விருந்து இவ்வுலகையே பரிசாக வழங்கியதற்கு ஒப்பானதாம். அப்படியென்றால் அந்தளவுக்கு ஔவைப்பிராட்டிக்குஅவ்வுணவுசுவையானதாக இருந்திருக்கும் என்பதை அறியமுடிகிறது.



மேலும், கரிய அடிப்பகுதியையுடைய வரகுப் பயிர், பெரிய கதிர்களையுடைய தினை, சிறிய கொடியாக வளரும் கொள், அவரை போன்றவை இவ்வூரின் முக்கிய உணவாக மாங்குடி கிழார் புறநானூறு பாடலில் (335) குறிப்பிட்டுள்ளார்.

பாரியின் நாடு கதிர்கள் வளைந்து ஒடியாமல் வரகானது மிகக் காய்ந்து விளைந்தது. அந்த வரகை அறுக்கவும், தினையை அரியவும், கொடி அவரையையும் அறுக்கவும் அந்நாடு ஆரவாரம் உடையதாயிருந்தது என்பதை,

கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து
வாலிதின் விளைந்த புது வரகு அரிய
தினை கொய்ய, கல்வை கறுப்ப, அவரைக்
கொழுங்கொடி விளர்க் காய் கோட் பதம் (புறம். 120:8-11)

என பாரிநாட்டின் வளத்தை புகழ்ந்து கபிலர் சிறப்பித்துள்ளார்.

ஒருவர் தினையளவு நன்மையை ஒருவர் செய்தால்கூட அதைபனையளவுகருதவேண்டும் என்று தினையை ஒப்பிட்டு உவமையாக,

தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரி வார் (திருக். 104)

என்று பொய்யில் புலவர் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

நன்னனது மலைநாட்டு நிலத்தார் அவரை விதைகளையும் மூங்கில் அரிசியையும், நெல்லின் அரிசியையும் கலந்து புளி கரைக்கப்பட்ட உரையிற்பெய்து புளியற்கூழாகக் குழைத்து உட்கொண்டனர் என்பது சங்க இலக்கிய பாடல்கள் விளக்கியுள்ளது.

தொண்டை நாட்டில் முல்லைநில மக்கள் பால் கலந்த தினையரிசி சோறும், வரகரிசி சோற்றுடன் அவரைப் பருப்பு கலந்து செய்து 'கும்மாயம்' என்ற உணவையும் உண்டனர். மேலும், முல்லை நிலத்தைச் சார்ந்திருக்கும் புன்செய் நிலங்களையுடைய சிறிய ஊர்களில் நெல் விளைவதில்லை. அந்நிலங்களில் விளைந்த வரகும் தினையுமாகிய உணவுப் பொருட்களை பொருள் இல்லாதவர்களுக்கு தானமாக வழங்கினர் என்பதினை,

உடை முதல் புறவு சேர்ந்திருந்த
புன்புலச் சீறூர், நெல் விளையாதே; (ஐங். 285:2-3)

மேலும்,

வரகும், தினையும் உள்ளவை எல்லாம்
இரவலம் மாக்களுக்கு ஈயத் தொலைந்தன (ஐங் 261:1-2)

என ஐங்குநுறூறு பாடல் வரிகள் அறியலாகிறது.

கானவா க்கு அஞ்சாத கொடிய பற்களை உடைய பன்றிகள் மென்மையான தினையை மேய்ந்தது. அத்தகையவலியகற்கள்பொருந்திய மலைநாடவன் என்பதை,

சிறுதினை கொய்த இருவி வெண்கால்
காய்ந்த அவரைப் படு கிளி கடியும்
யாணர் ஆகிய நல்மலை நாடன் (ஐங் 286:1-3)

என ஐங்குநுறூறு பாடல் வரிகள் செப்புகின்றன.

இவ்வாறு பழங்காலம் முதல் இக்காலம் வரை சிறுதானியங்கள் உணவில் முக்கிய பங்கு பெற்று வருகிறது என்பதை அறியமுடிகிறது.

தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

# வணிகம் என்றால் என்ன

கவி

வணிகமயமாக்கல் என்பது மொத்த மற்றும் சில்லறை விற்பனைக்கு கிடைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளின் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகும். இதில் சந்தைப்படுத்தல் உத்திகள், காட்சி வடிவமைப்பு, போட்டி விலை நிர்ணயம் மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை அடங்கும்.

பிராண்ட் அதிர்வுகளை உருவாக்கவும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், விற்பனையை அதிகரிக்கவும் விரும்பும் வணிக உரிமையாளர்களுக்கு வணிகமயமாக்கல் அவசியம்.




## வணிகத்தைப் புரிந்துகொள்வது

விற்பனையில் அளவுகளைக் குறிப்பிடுதல், பொருட்களுக்கான அளவுகளை அமைத்தல், காட்சி வடிவமைப்புகளை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குதல் மற்றும் தள்ளுபடிகள் மற்றும் கூப்பன்களைக் கண்டறிதல் ஆகியவை அடங்கும். ஒரு பரந்த பொருளில், வர்த்தகம் என்பது சில்லறை விற்பனை மற்றும் இறுதி நுகர்வோரை அடைகிறது.

வணிகச் சுழற்சிகள் கலாச்சாரங்கள் மற்றும் பருவங்களுக்கு குறிப்பிட்டவை. இந்த சுழற்சிகள் பள்ளி அட்டவணையைச் சுற்றி வரலாம் மற்றும் பிராந்திய மற்றும் பருவகால விடுமுறைகள் மற்றும் வானிலை நிலைமைகளை இணைக்கலாம்.

சில்லறை விற்பனையின் பல்வேறு அம்சங்களைப் பொறுத்தமட்டில் வணிகமயமாக்கல் என்பது வெவ்வேறு விஷயங்களைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, சந்தைப்படுத்துதலில், வணிகமயமாக்கல் என்பது ஒரு தயாரிப்பு, படம் அல்லது பிராண்டைப் பயன்படுத்தி மற்றொரு தயாரிப்பு, படம் அல்லது பிராண்டை விற்கும்.

அனைத்து சில்லறை விற்பனையாளர்களும் அவர்கள் விற்கும் பொருட்களின் தயாரிப்பாளர்கள் அல்ல. அனைத்து விற்பனைகளின் மொத்த மதிப்பை அளவிடுவது நிறுவனத்தின் செயல்திறனைப் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. நுகர்வோர் முதல் நுகர்வோர் சந்தையில் இது மிகவும் உண்மையாகும், அங்கு சில்லறை விற்பனையாளர் மூன்றாம் தரப்பு வாங்குபவர்களையும் விற்பவர்களையும் உண்மையில் யாரும் பங்கேற்காமல் இணைக்கிறது.

சரக்குத் துறையில் உள்ள சில்லறை விற்பனையாளர்களுக்கு வர்த்தகம் மதிப்பை வழங்குகிறது; இந்தத் துறையில், சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் சரக்குகளை அதிகாரப்பூர்வமாக வாங்குவதில்லை. நிறுவனங்கள் பெரும்பாலும் வணிகத்தின் சில்லறை இடத்தில் சரக்குகளை சேமித்து வைக்கின்றன, சில சமயங்களில் மற்றொரு நபரின் அல்லது நிறுவனத்தின் பொருட்கள் அல்லது சொத்தின் கட்டணத்திற்காக. பொதுவாக, அவர்கள் ஒருபோதும் பொருளின் உண்மையான உரிமையாளராக இருப்பதில்லை, ஏனெனில் சரக்குகளில் பொருளை வைத்த நபர் அல்லது நிறுவனம் அவர்கள் தேர்வுசெய்தால் உருப்படியைத் திரும்பப் பெற்று உரிமை கோரலாம்.




மொத்த விற்பனை மதிப்பு என்பது வாடிக்கையாளருக்கு வாடிக்கையாளருக்கு இடையேயான பரிமாற்ற தளத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் விற்கப்படும் பொருட்களின் மொத்த மதிப்பாகும். இது உங்கள் வணிகத்தின் வெற்றியை அளவிடுவது.

சமீபகாலமாக, வர்த்தகம் மேலும் மேலும் முன்னேறிவருகிறது. வர்த்தகத்தின் பாத்திரங்கள் ஒரு பரிணாமத்திற்கு உட்பட்டுள்ளன. முதன்மை வணிகர்கள், முன்பு முக்கியமாக தயாரிப்புகளின் தேர்வு மற்றும் விளக்கக்காட்சியில் அக்கறை கொண்டிருந்தனர், இப்போது பரந்த பொறுப்புடைமை மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தில் அதிக கை வைத்துள்ளனர், அத்துடன் காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வடிவமைப்பு தொடர்பான வடிவமைப்பு மற்றும் திறமையின் வளர்ச்சியையும் பெற்றுள்ளனர்.

## வணிக நிறுவனம் VS சேவை நிறுவனம்

பெயர் குறிப்பிடுவது போல, ஒரு வணிக நிறுவனம் நுகர்வோருக்கு உறுதியான பொருட்களை விற்கிறது. இந்த வணிகங்கள், உழைப்பு, பொருட்கள் மற்றும் நுகர்வோருக்கு பொருட்களை விற்பதில் உள்ள அனைத்தும் உட்பட செலவினங்களைச் சந்திக்கின்றன.

சேவை நிறுவனங்கள் பணம் சம்பாதிப்பதற்காகவோ அல்லது லாபம் ஈட்டுவதற்காகவோ உறுதியான பொருட்களை விற்பதில்லை.




புதுமைகளை மதிக்கும் அல்லது அவர்களின் சேவைகள் தேவைப்படும் வாடிக்கையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் சேவைகளை வழங்குகிறார்கள். வழங்கும் நிறுவனங்கள் ஆலோசனைகள், ஸீபு நிறுவனங்கள், நிதி திட்டமிடுபவர்கள், காப்பீடு வழங்குநர்கள் மற்றும் ஹுவீ நிறுவனங்கள் என எதுவாகவும் இருக்கலாம்.

## வணிக உத்திகள்

வாங்குபவர்களை கொள்முதலுக்கு ஈர்ப்பதற்காக வணிகர்கள் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துகின்றனர். சாளரம் மற்றும் அங்காடி காட்சிகள், தயாரிப்புகளின் மூலோபாயக் குழுக்கள், தெளிவான அடையாளங்களுடன் கூடிய நன்கு இருப்பு வைக்கப்பட்ட அலமாரிகள், சில விளம்பர தயாரிப்புகள், மாதிரிகள் மற்றும் பிற இலவசங்களை முன்னிலைப்படுத்துதல், கடையில் உள்ள ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பிற அங்காடி விளம்பரங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

தொழில்முறைக்கு ஒத்ததாக இருப்பதால் தூய்மை மற்றும் நேர்த்தியும் மிகவும் அவசியம். ஆன்லைன் ஷாப்பிங் செய்பவர்களைக் கவரும் வகையில் ஆன்லைன் ஸ்டோர்களும் விற்பனை உத்திகளைப் பயன்படுத்தலாம்.

## விற்பனையின் நன்மைகள்

விற்பனை மற்றும் வாடிக்கையாளர் தக்கவைப்பை நேரடியாகப் பாதிக்கும் என்பதால், சில்லறை விற்பனையாளருக்கு வர்த்தகம் மிகவும் முக்கியமானது. ஒரு கடையில் உடல் இருப்பு மற்றும்/அல்லது ஆன்லைன் இருப்பு இருந்தாலும், அது தன்னையும் அதன் தயாரிப்புகளையும் எவ்வாறு முன்வைக்கிறது என்பது முக்கியமானது. ஒரு கடையில், தூய்மை, அமைப்பு, அணுகல் எளிமை மற்றும் தள்ளுபடிகள் மற்றும் சலுகைகளின் மூலோபாய பயன்பாடு ஆகியவை சாதாரணமாக ஒரு முறை உலாவவும், மீண்டும் வாங்குபவராகவும் மாறும் வாடிக்கையாளருக்கு இடையேயான வித்தியாசமாக இருக்கலாம்.

ஒரு சில்லறை விற்பனையாளர் தனது பிராண்டை வளர்க்கவும், அதே பிரிவில் உள்ள மற்றவர்களுடன் போட்டியிடவும், பொருளாதாரம் சிரமப்படும்போதும் தொடர்புடையதாக இருக்கவும் பயனுள்ள வணிகமயமாக்கல் உதவும்.

## வணிக நிறுவனங்களின் வகைகள் என்ன?

வணிகம் என்பது ஒரு பொருளை விற்பனை செய்வதில் பங்கேற்கும் எந்தவொரு நிறுவனத்தையும் குறிக்கிறது. வர்த்தகத்தில் இரண்டு வகைகள் உள்ளன: சில்லறை மற்றும் மொத்த விற்பனை. சில்லறை விற்பனையானது அதன் தயாரிப்புகளை நேரடியாக நுகர்வோருக்கு விற்கிறது, மொத்த விற்பனையாளர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி சில்லறை விற்பனையாளர்களுக்கு விற்கிறார்கள்.

## வர்த்தகம் எதைக் குறிக்கிறது?

பரந்த வர்த்தகம் என்பது பொருட்களின் விளம்பரம் மற்றும் விற்பனை ஆகும். இது பெரும்பாலும் சில்லறை விற்பனையைக் குறிக்கிறது, அதன் குறிக்கோள் நுகர்வோரின் வாங்குதல் முடிவுகளை பாதிக்கிறது. இருப்பினும், இது விற்பனையிலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும். இது விற்பனைக்கு வழிவகுக்கும் செயல்முறையாகும். இது அளவுகளை நிர்ணயித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகளை நிர்ணயித்தல், காட்சி வடிவமைப்புகளை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குதல் மற்றும் தள்ளுபடிகள் அல்லது கூப்பன்களை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

## வணிகத்திற்கும் சேவை நிறுவனத்திற்கும் என்ன வித்தியாசம்?

மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிறுவனம் நுகர்வோருக்கு உறுதியான பொருட்களை விற்கிறது. இந்த நிறுவனங்கள் தயாரிப்புகளை வழங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் உழைப்பு மற்றும் பொருட்கள் போன்ற செலவுகளைச் செய்கின்றன. சேவை நிறுவனங்கள் வருமானம் ஈட்ட உறுதியான பொருட்களை விற்பதில்லை. சேவை நிறுவனங்களின் எடுத்துக்காட்டுகள் ஆலோசகர்கள், கணக்காளர்கள் மற்றும் நிதி திட்டமிடுபவர்கள்.

## சில்லறை விற்பனைப் பொருட்களின் முக்கிய வகைகள் யாவை?

சில்லறை விற்பனையானது நுகர்வோர் விரும்பும் தயாரிப்புகளை உள்ளடக்கியது, ஆராய்ச்சி மற்றும் ஒப்பீடு கடைக்கு தயாராக உள்ளது, மேலும் பொதுவாக ஒரு தனிநபர் அல்லது வணிக பார்வையாளர்களுக்கு தேவை உள்ளது. பல வகையான சில்லறை விற்பனைப் பொருட்கள் உள்ளன, மேலும் முதல் ஐந்து வகைகள் தயாரிப்பு, சில்லறை விற்பனை, காட்சி, டிஜிட்டல் மற்றும் ஓம்னிசேனல் ஆகும். பெரும்பாலான சில்லறை விற்பனையாளர்கள் ஐந்தில் ஒன்றில் நிபுணத்துவம் பெற்றவர்கள். இருப்பினும், நம்பமுடியாத ஆர்வமுள்ள சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் கடைகளை பல வகைகளின் தயாரிப்புகளுடன் விற்பனை செய்கின்றனர்.

## இறுதி எண்ணங்கள்

பார்வையாளர்களின் மனதில் அதிர்வுகளை உருவாக்க அனைத்து பிராண்ட் உரிமையாளர்களுக்கும் வணிகமயமாக்கல் முக்கியமானது. வணிக உரிமையாளர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கு பிராண்ட் ரீகால் ஒன்றை உருவாக்க வேண்டும், அதை வணிகமயமாக்கல் மூலம் செய்யலாம். இது வணிகங்களுக்கு வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், இறுதியில் பிராண்ட் உரிமையாளர்கள் விற்பனையை அதிகரிக்கவும் உதவுகிறது.

தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

# மண் பாங்கு

- அதிக நீர் கொள்ளும் திறன் மற்றும் அதிக அளவிலான களிமண் வளம் பெற்ற மண் வகையே நெற்பயிர் சாகுபடிக்கு ஏற்றது. கரிமப்பொருள் நிறைந்த மண்ணாகவும் இருத்தல் சிறந்தது.
- களி மண் அல்லது களிகலப்பு மண் மிகச் சிறந்தது.
- இவ்வகையான மண்ணே நீர் கொள்ளும் திறன் பெற்று நிலையான பயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- நெற்பயிர் பகுதிநீர்வாழ் தாவரமாய் இருப்பினும் நீர் மூழ்கிய நிலையிலும் நன்கு வளரும்.
- வேறுபட்ட உற்பத்தித் திறன் கொண்ட நெல்லை எல்லா வகையான மண்ணிலும் பயிரிட்டு பயன் பெறலாம்.
- ஆற்றோர வண்டல் மண், சிகப்பு-மஞ்சள், சிவப்பு வண்டல் மண், மலைமண், குன்று மண், சரிவு மண், செம்பொறை மண், கரையோர வண்டல் மண், சிகப்பு மற்றும் கருப்பு மண் கலவை, நடுநிலை மற்றும் ஆழம் குறைவான மண் போன்ற முதன்மையான மண் வகைகளில் நன்கு வளரும்.
- மண்ணின் கார அமில அளவு (5.5-6.5) நெற்பயிர் வளர்ச்சிக்கு உகந்தது

## பிரச்சனைக்குரிய மண்ணுக்கு ஏற்ற சிறப்பு தொழிற்நுட்பங்கள்

**பொல பொலப்பான மண்ணுக்கு:**

400 கிலோ கல் உருளை வண்டி (அ) கல் நிரப்பிய உருளைப் பெட்டியை வயலில் சரியான ஈரப்பதம் (ஈரப்பதம் 13-18 சதவிகிதம்) இருக்கும்போது எட்டு முறை ஓட்டி மண்ணை நெருக்கமாக ஆக்க வேண்டும். இவ்வாறு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை செய்வதால் சேற்றுழவின் போது சுமை இழுக்கும் விலங்கினமோ, தொழிலாளர்களோ மூழ்காமல் பாதுகாக்க உதவுகின்றது.

**களர் நில மண்ணுக்கு:**

களர்நில மண்ணுக்கு காரஅமிலநிலை 8.5 க்கும் அதிகமாக இருக்கும்போது போதுமான ஈரப்பதத்தில் நிலத்தை நன்கு உழ வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட ஜிப்சத்தில் 50 சதவிகிதம் முழுவதையும் சீராக அளிக்க வேண்டும். நிலத்தின் கீழ்வடிகால் அமைத்தல் அவசியம். இவ்வாறு செய்வதால் கரையும் உப்புகள் வெளியே தள்ள உதவுகிறது. பசுந்தாள் உரம் 5 டன்/எக்டர் என்ற அளவில் நடவுக்கு 10-15 நாட்கள் முன்னரே இட வேண்டும். 37.5 கிலோ ஜிங்க்சல்ஃபேட்டை மொத்த எடை 75 கிலோ வரும் வரை மணலுடன் கலந்து சமப்படுத்திய 1 எக்டர் நிலத்தில் சீராகப் பரப்ப வேண்டும். இக்கலவையை மண்ணில் அப்படியே அளிக்கக் கூடாது. களர் நிலமண்ணில் வளரும் நெல்லுக்கு இம்முறை ஏற்றது.

**உவர் மண்ணுக்கு:**

மின் கடத்தும் திறன் 4 -வி/மீ சிளீ மதிப்பீடுகள் கொண்ட உவர் மண்ணுக்கு, பக்கவாட்டில் முதன்மையான வாய்க்கால் (60 செ.மீ ஆழம் மற்றும் 45 செ.மீ அகலம்) அமைக்க வேண்டும். பசுந்தாள் உரம் 5 டன்/எக்டர் என்ற அளவில் நாற்று நடுவதற்கு 10-15 நாட்கள் முன்னரே அளிக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் ஜிங்க்சல்பேட் 37.5 கிலோ/எக்டருடன் 25 சதவிகிதம் தழைச்சத்தை கலந்து நடவின்போது அளிக்க வேண்டும்.

**அமில மண்ணுக்கு:**

அதிக நெல் மகசூல் கிடைக்க, அமில மண்ணுக்கு மண் ஆய்வுக்குப்பின் சுண்ணாம்பு சத்து அளிக்க வேண்டும். கடைசி உழவுக்கு முன் 2.5 டன்/எக்டர் என்ற அளவில் ஒவ்வொரு பயிருக்கும் 5 வது பயிர் வரை சுண்ணாம்பு சத்து அளிக்க வேண்டும்.

மேலே செல்க

**நிலம் பண்படுத்துதல்:**

**முதல்நிலை உழவு:**



**உழுதல்**

உழுதல், நிலத்தை பண்படுத்தலின் முதன்மை செயலாகும். இவ்வாறு உழுவதால் மண்ணை பகுதியாகவோ/முழுமையாகவோ துண்டாக்க, உடைக்க புரட்டிப் போட உதவுகிறது. இதனால் விதைப்பிற்கு ஏற்றநிலமாக மண் மாறுகிறது.

**உழுவதன் குறிக்கோள்:**

நல்லநயம் கொண்ட மண் மற்றும் ஆழமான பாத்தி அமைக்க உதவுகிறது.

மண்ணின் நீர் பிடிப்புத் தன்மையை உயர்த்துகிறது.

மண்ணின் காற்றோட்டத்தை



உழவு செய்தல்


சேற்றுழவு

மேம்படுத்துகிறது.

களைகள், பூச்சிகள் ,நோய்களை அழிக்கின்றது.

மண் வளத்தை மேம்படுத்துகிறது

### இரண்டாம்நிலை உழவு

#### மண் கிளர்வு செய்தல்

மண்கிளர்வுஇரண்டாம்நிலைபண்படுத்துதல் செயல். மேலோட்டமானஆழம்வரைஉழுவதால் மண்ணைபொலபொலப்பாகவும்,பொடியாகவும் ஆக்குகிறது. மேலும் களைகளை துண்டாக்கி மண்ணோடு கலக்குகிறது.

#### மண் கிளர்வின் குறிக்கோள்:

வயலில் உள்ள மண் கட்டிகளை பொடியாக்குகிறது.

வயலில்உள்ளபுல்மற்றும்இதரவிதைகளை அழிக்கிறது.

பயிர் கழிவுகளை துண்டாக்கி வயலின் மேல்பரப்பு மண்ணோடு கலக்கிறது.

பெரிய மண் கட்டிகளை உடைத்து, மேல்பரப்பைசீராகவும்,சமமாகவும்வைக்கிறது.

மண் கட்டிகளின் ஈரத்தன்மை குறைந்த பின் தான் மண் கிளர்வு செய்ய முடியும்.

#### சேற்றுழவு:

சேற்றுழவுஎன்பதுமண்ணைநீருடன்நன்கு கலக்கும் அளவு நிலத்தை உழுவது. நாட்டுக் கலப்பை கொண்டு முதல் உழவு முடித்த பின் 5-10 செ.மீ ஆழம் நிலையான நீர் நிற்கும் வயலில் சேற்றுழவு செய்ய வேண்டும். மண் கட்டிகளை உடைத்து , மண்ணை நீருடன் நன்கு கலக்க வைக்கிறது.

#### சேற்றுழவின் குறிக்கோள்:

நீர் கசிவு மற்றும் நீர் ஊடுருவுதலை குறைக்கிறது.

மண் சிதைவுறுதலின் மூலம் களைகளை அழிக்கிறது.

மண்ணை மென்மையாக ஆக்குவதால் நாற்றுகளை நடுவது எளிதாக இருக்கும்.

நீரில் கடத்தும் திறன் குறைவதால் நீர் மற்றும் ஊட்டச்சத்து இழப்பு குறைகிறது.

#### நிலத்தை சமன்படுத்துதல்:

நிலத்தின் மதிப்பு நிலையான திருத்தம் கொண்டதாக உருவாக்க சமன்படுத்துதல் அவசியம். இருக்கிறநிலமட்டநிலத்தைசிறப்பான வேளாண் உற்பத்தித்திறன் கொண்ட நிலமாக மாற்றுவதே சமன்படுத்தலின் நோக்கம்.

#### சமன்படுத்தலின் குறிக்கோள்:

சிறப்பானநீர்ப்பாசனம்அளிக்கமற்றும்அதிக அளவில் மழைநீரை சேமிக்க உதவுகின்றது .

மேற்பரப்பு வடிகாலை செம்மைப்படுத்தி, மண் அரிப்பைக் குறைக்கிறது.

போதுமானஅளவுநிலஅளவுமற்றும்சிறப்பான எந்திரமயமாக்குதலுக்கு நிலஅமைப்பை மேம்படுத்துகிறது.

நிறைவான நில சமன்படுத்தலினால் களை மற்றும் நீர் மேலாண்மை சிறப்படைகிறது.

சிறப்பானபயிர் நிறுவுதல் மற்றும் பயிர்நிறுத்தத்தை உயர்த்தி எண்ணிக்கையை மேம்படுத்துகிறது.


சமப்படுத்துதல்

# சோளக்கொல்லை பொம்மைகளின் சுவாரஸ்ய வரலாறு!

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நின்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்! - உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணி உன்னைப்போல் இரவுபகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

வட்டமான பெரும் பூசினிக்காய் போல
மஞ்சள் நிற உறு மாலைப்பார்!- தலையில்
மஞ்சள் நிற உறு மாலைப்பார்!
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!-இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்! - கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்! - ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ ? - உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ ?
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே - வெடி
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக்கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வருகள்வனுனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே - ஏங்கி
நடுநடுங்கி மனம் வாடுமே

ஏழைக் கமக்காரன் வேளைக் குதவிசெய்



ஏவற்காரன் நீயே யென்னினும் - நல்ல
ஏவற்காரன் நீயே யென்னினும்
ஆளைப்போலப் போலி வேடக்காரன் நீயே
ஆவதறிந்தன னுண்மையே - போலி
ஆவதறிந்தன னுண்மையே

தூரத்திலே யுனைக் கண்டவுட னஞ்சித்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம் - மிகத்
துண்ணென் றிடித்ததென் நெஞ்சகம்
சேரச் சேரப் போலி வேடக்காரனென்று
தெரிய வந்ததுன் வஞ்சகம் - நன்று
தெரிய வந்ததுன் வஞ்சகம்

சிங்கத்தின் தோலினைப் போர்த்த
கழுதைபோல்
தேசத்திலே பலர் உண்டுகாண் - இந்தத்
தேசத்திலே பலர் உண்டுகாண்
அங்கவர் தம்மைக்கண் டேமாந்து போகா
அறிவு படைத்தனன் இன்றுநான் - உன்னில்
அறிவு படைத்தனன் இன்றுநான்.

என்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடலை எவரும் மறந்திருக்க முடியாது..

பச்சைப்பசேல் என்ற நெல் வயல்வெளியின் நடுவில், தானியத் தோட்டங்களில் வயிற்றில் வைக்கோலை அடைத்துக்கொண்டு பருத்த உடலுடன், தலையில் கவிழ்த்த சட்டியுடன் பார்த்தவுடன் சிரிக்கும் தோற்றத்துடன் இருக்கும் சோலைக்கொல்லை பொம்மைகள் கத்தரி தோட்டத்து வெருளிகள். இவை எங்கே, எப்போது தோன்றின என்கிற வரலாற்றைப் பற்றி இந்தப் பதிவில் பார்ப்போம்.

தோற்றம்: உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாசாரங்களில் இந்த பொம்மைகள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றும் அவற்றின் தனித்துவமான வடிவமைப்புகள் மற்றும் சிறப்புகளைக் கொண்டிருந்தன. ஆங்கிலத்தில், 'ஸ்கேர்குரோக்கள்' என்று



அழைக்கப்படும் சோளக்கொல்லை பொம்மையின் தாயகம் கிரேக்கத்தைச் சேர்ந்தது. 3000 ஆண்டுகளுக்கு முந்தைய பண்டைய கிரேக்கத்தில் திராட்சைத் தோட்டங்களில் இருந்து பறவைகளை பயமுறுத்துவதற்காக கடவுளின் மகன் என்று கருதப்பட்டவரின் மரச்சிலைகள் வைக்கப்பட்டன. அதே நேரத்தில் எகிப்தில் விவசாயிகள் நைல் நதிக்கரையில் உள்ள தங்கள் கோதுமை வயல்களை காடைகளிடமிருந்து பாதுகாக்க வலைகளால் மூடப்பட்ட மரச்சட்டங்களை பயன்படுத்தினர்.

ஜப்பானிய ஸ்கேர்குரோக்கள்: ஜப்பானில் 'ககாசி' என்று அழைக்கப்படும் ஸ்கேர்குரோக்கள் பெரும்பாலும் பாரம்பரிய ஆடைகளில் மக்களைப் போலவே உருவாக்கப்பட்டன. மேலும், பறவைகள் மற்றும் பிற பூச்சிகளை பயமுறுத்துவதற்கு அந்த பொம்மைகளின் கைகளில் ஆயுதங்கள் கூட வழங்கப்பட்டன.

ஐரோப்பா: ஐரோப்பிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், வறட்சி மற்றும் பஞ்சத்தைக் கொண்டுவருவதாகக் கருதப்படும் தீய ஆவிகளைத் தடுக்கும் ஒரு வழியாக, மக்களைப் போலவே இருக்கும் வைக்கோல் பொம்மைகளை வயலில் விட்டுச் செல்வார்கள்.

ரோமானிய சோளக்கொல்லை பொம்மைகள்: ரோமானியர்கள் கிரேக்கர்களின் யோசனையை தழுவி ஐரோப்பா முழுவதும் அவற்றின் பயன்பாட்டை அதிகரித்தனர். அவர்களுடைய வயல்வெளிகளில் பெரும்பாலும் பழைய ஆடைகளை உடுத்திய மர உருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்து பயந்துபோன பறவைகளும் பிற உயிரினங்களும் அவற்றை நெருங்குவதற்கு அஞ்சின.



இடைக்கால ஐரோப்பா: ஐரோப்பாவில் இடைக்காலத்தில் பறவையை பயமுறுத்துபவர்கள் என்று அழைக்கப்படும் சிறு வயது சிறுவர்கள் வயல்களில் ரோந்து செல்வார்கள். பயிர்களில் வந்து அமரும் பறவைகள் மற்றும் பூச்சி இனங்களை பயமுறுத்துவதற்காக மரக்கட்டைகளை ஒன்றாக சேர்த்து தட்டி ஒலி எழுப்புவார்கள்.

அமெரிக்க பழங்குடியினர்: பூர்வீக அமெரிக்க பழங்குடியினர் தங்கள் மக்காச்சோள வயல்களில் இருந்து பறவைகளை துரத்த எண்ணி மரக்கம்பங்கள் மற்றும் விலங்குகளின் தோல்களால் செய்யப்பட்ட ஸ்கேர்குரோக்களை பயன்படுத்தினர். அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் பின்னிருந்த முறைகளை பின்பற்றினர்.

நவீன பயன்பாடு: நவீன விவசாயம் பெரும்பாலும் பூச்சிக் கட்டுப்பாட்டுக்கு மேம்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருகிறது. ஆனாலும், சில பகுதிகளில் இன்னும் சோளக்கொல்லை பொம்மைகள் பயன்படுத்தப்படுகின்றன.

கலாசார சின்னம்: சோளக்கொல்லை பொம்மைகள் பல்வேறு கலாசாரங்களில் நீடித்த அடையாளமாக மாறிவிட்டன அவை பெரும்பாலும் நாட்டுப்புறக் கதைகள் இலக்கியம் மற்றும் பிரபலமான அமெரிக்க ஊடகங்களிலும் இடம் பெற்றுள்ளன. சில நகரங்கள் மற்றும் கிராமங்களில் நடக்கும் திருவிழாக்களில் தங்கள் கற்பனையில் சோளக்கொல்லை பொம்மைகளை உருவாக்கி காட்சிப்படுத்துகின்றனர். அதற்கான போட்டிகள் வைக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த நண்பன்: ரசாயன பூச்சிக்கொல்லிகள் தெளித்த பயிர் வகைகள் மக்களுக்கும் மற்றும் அவற்றை உண்ணும் வனவிலங்குகளுக்கும் தீங்கு செய்கின்றன. ஆனால், சோளக்கொல்லை பொம்மைகள், பறவைகள் மற்றும் பிற உயிர்களிடமிருந்து பயிர்கள் அழிவதைத் தடுத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த நண்பனாக இருந்தது. உலகெங்கும் உள்ள சோளக்கொல்லை பொம்மைகள் வளமான வரலாறு மற்றும் கலாசார முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

விஜயலட்சுமி



# சமூக மாற்றத்தில் பெண் தொழில் முனைவோரின் பங்களிப்பு!

பெண் தொழில் முனைவோர் சமூகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். பல்வேறு வழிகளில் பெண்களுக்கான முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறார்கள். அவர்களின் சிறப்பு இயல்புகளைப் பற்றி இந்தப் பதிவில் பார்ப்போம்.

**பெண் தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்:**

முன் மாதிரிகள்: வெற்றிகரமான பெண் தொழில் முனைவோர் பிற பெண்களுக்கு முன்மாதிரியாக செயல்படுகிறார்கள். வணிகத்தில் முன்னணியில் பெண்களால் சிறந்து விளங்க முடியும், வெற்றி பெற முடியும் என்பதை நிரூபிக்கிறார்கள். இதனால் பிற பெண்களை தங்களைப் போலவே தொழில் முனைவோராக உருவெடுக்க நேரிடையாகவும், மறைமுகமாகவும் ஊக்குவிக்கிறார்கள்.

பொருளாதார வலுவூட்டல்: ஒரு புதிய தொழிலை தொடங்கி அதை வளர்த்து வெற்றிகரமாக மாற்றுவதன் மூலம் பெண்கள் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், உள்ளூர் பொருளாதாரங்களை ஊக்குவித்து வறுமையை குறைப்பதற்கும், வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கும் உதவுகிறார்கள்.

புதுமை மற்றும் பன்முகத் தன்மை: பெண்கள் வணிக உலகிற்கு தனித்துவமான கண்ணோட்டங்களையும் யோசனைகளையும் கொண்டு வருகிறார்கள். இது பல்வேறு நுகர்வோர் தேவைகளை பிரதிபலிக்கும் புதுமை மற்றும் ஆக்கப்பூர்வமான தீர்வுகளுக்கு வழி வகுக்கிறது. இறுதியில் நுகர்வோர் சந்தையை வளப்படுத்துகிறது.

சமூக மேம்பாடு: பெண் தொழில் முனைவோர் பெரும்பாலும் உள்ளூர் வணிகம் மற்றும் பெண்கள் தயாரிப்புகளில் தங்கள் சமூகங்களில் முதலீடு செய்கிறார்கள். உள்ளூர் வணிகம் மற்றும் முன் முயற்சிகளை ஆதரிக்கிறார்கள். இது சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கிறது மற்றும் சமூக நல வாழ்வை மேம்படுத்துகிறது.



சமத்துவம்: பாரம்பரியமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் தொழில்களில் வெற்றி பெறுவதன் மூலம் பெண் தொழில் முனைவோர் பாலின பாத்திரங்கள் மற்றும் திறன்களைப் பற்றிய ஒரே மாதிரியான கருத்துக்களை உடைத்து சமூகத்தில் ஆண்களும் பெண்களும் சமம் என்கிற சமத்துவத்தை நிறுவ பாடுபடுகிறார்கள். பல பெண்கள் தலைமையில் அமைந்த வணிகங்கள், சமூக தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. சமத்துவமின்மை சுகாதார மற்றும் கல்வி போன்ற அழுத்தமான சமூகப் பிரச்னைகளை நிவர்த்தி செய்து அதன் மூலம் சமத்துவமான சமூகத்திற்கு பங்களிக்கின்றன.

நெட்வொர்க்கிங் மற்றும் ஒத்துழைப்பு: பெண் தொழில் முனைவோர் பெரும்பாலும் நெட்வொர்க் மற்றும் ஆதரவு அமைப்புகளை உருவாக்குகிறார்கள். இது பெண்களிடையே ஒத்துழைப்பு மற்றும் அறிவு பகிர்வை செயல்படுத்துகிறது. சமூகம் மற்றும் பரஸ்பர ஆதரவின் உணர்வை வளர்க்கிறது.

வழி காட்டுதல்: பல பெண் தொழில் முனைவோர் பலருக்கும் வழிகாட்டியாக செயல்படுகிறார்கள். அடுத்த தலைமுறை பெண் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்து வணிகத்தில் வெற்றி பெறத் தேவையான கருவிகள், உதவிகள் மற்றும் நம்பிக்கையை தந்து அவர்களை ஆயத்தப்படுத்துகின்றனர்.

வேலை, வாழ்க்கை சமநிலையை ஊக்குவித்தல்: நெகிழ்வான பணிச்சூழல்கள் மற்றும் கொள்கைகளுக்காக வாதிடுவதன் மூலம் பெண் தொழில் முனைவோர் பெரும்பாலும் முன்மாதிரியாக வழிநடத்துகிறார்கள். அனைத்து ஊழியர்களுக்கும் வேலை வாழ்க்கை சமநிலையை மதிப்பிடும் கலாசாரத்தை ஊக்குவிக்கிறார்கள்.

சமூக மாற்றங்கள்: பெண் தொழில் முனைவோர் தங்கள் முயற்சிகளில் எதிர்கொள்ளும் போராட்டங்கள், சவால்கள், தடைகளைத் தாண்டி வெற்றி பெற்று விளங்குவதன் மூலம் பிற பெண்களுக்கு உத்வேகத்தையும் தங்களாலும் சாதிக்க முடியும் என்கிற ஆழமான நம்பிக்கையும் விதைத்து பெரிய அளவில் சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். தங்களது லட்சியங்களை அடைய குறிப்பிடத்தக்க அபாயங்களை எதிர்கொள்கின்றனர். மேலும் வளர்ச்சி, படைப்பாற்றல் மற்றும் சிக்கல்களை தீர்ப்பதில் கவனம் செலுத்துகின்றனர்.

பெண்களுக்கு சொந்தமான ஸ்டார்ட் அப்களை நோக்கமாகக் கொண்ட மானியங்கள், கடன்கள் அல்லது முதலீட்டின் நிதிகளை உருவாக்கவும், பெண் தொழில் முனைவோரை மையமாகக் கொண்ட கிரவுண்ட் ஃபண்டிங் தளங்களை உருவாக்கவும் முன்வர வேண்டும். இதனால் பெண் தொழில் முனைவோரின் எண்ணிக்கை அதிகமாகும்.

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**



தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

# மெய்யும் பொய்யும்




நேற்றைக்குச் சிலநாள்முன்
நடுவழியில் ஒருருவம்...

மேனி தளர்ந்தொடுங்கி,
மெல்லியதாய் இளைத்துப்போய்,
கூனிக் குறுகி குற்றத்தைச் செய்ததுபோல்
நாணி நடுங்கி
நேர்பார்வை தனைத்தாழ்த்தி
கோணி முகங்கறுத்து
குந்திக்கொண் டிருந்ததது.

மெதுவாகக் கிட்டப்போய்
மெல்ல அருகணைந்து
'யார்நீ?' எனக்கேட்டேன்

மெல்லிய அடிக்குரலால்
மெதுமெதுவாய் வாயசைத்து
'மெய்' என்று சொன்னதது.

அப்பால் சிலதூரம்
அடிவைத்துப் போயிருந்தேன்

அங்கேயோ ஒருருவம்....

மேனி மினுக்கி
முகத்துக்குப் பூச்சிட்டு
காணும் எவரையுமே
கவர்ந்திழுக்கும் நோக்கோடு
தேனாகப் பேசி,
தெம்மாங்குப் பாட்டிசைத்து,
'மானாட மயிலாட' மேடையிலே
நிற்பதுபோல்
பட்டு,மணிமாலை, பளபளக்கும் மேலாடை
கட்டை விரல்தவிர கைமுழுதும்
மோதிரங்கள்
இப்படியாய்....
நெஞ்சை நிமிர்த்தியெனை நேராகப்
பார்த்துவிட்டு
'இஞ்சை பார்!இன்னும் இருப்பவற்றைக்
காட்டுகிறேன்
வீட்டுக்கு வா!'என்றும்
வலிந்து அழைத்த தது.

வீட்டுக்குப் போய்ப்பார்த்து
விறைத்துப் போய்விட்டேன்

வீட்டுச் சுவர்முழுதும்
விருதுகள், விளம்பல்கள்,
புன்முறுவல் புகைப்படங்கள்,
பதக்கங்கள் பதினாறு,
பரிசுகள் பாராட்டுப்
பத்திரங்கள் ஒருநூறு
பொன்னாடை .... என்றிருந்த
பலதையுமே பார்த்துவிட்டு,

'யார்நீ?' எனக்கேட்டேன்

கூசாமல் குனியாமல்
'பொய்'யென் றுரைத்த தது.

கவிஞர் வ. வடிவழகையன்

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2025 இல் வெளியிடப்பெற்றது.